பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
16 FEB 1998
மாநகராட்சி ...
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர்ஆண்டு 2029 மாசி 4 திங்கட்கிழமை (16-02-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 70

# மாங்குளம் நோக்கி 2 முனைகளில் அரச படையினர் முன்னேற முயற்சி!

## முச்சந்தி முரளி



அப்ப தொண்டா விட்டா லும் தொழிலாளர் விடமாட்டினம் போல......!

## புலிகள் எதிர்த்து கடும் தாக்குதல்

வவுனியா, பெப்ரவரி 16

மாங்குளத்தைச் சுற்றிவளைக்கும் நோக்கத்துடன் கனகராயன்குளம் பகுதியில் இருந்தும் ஒலுமடு பகுதியில் இருந்தும் இரு முனைகளில் 'வெற்றி உறுதி' படையினரின் நகர்வு ஆரம்பித்திருப்பதாக நேற்று இரவு வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

முன்னேறும் படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

படையினர் மீது புலிகள் கடும் ஷெல் தாக்குதல்கள் நடத்தி வருவதாகக் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

சனிக்கிழமை காலை முதல் நடைபெறும் சண்டைகளில் 21 படையினர் கொல்லப்பட்டிருப்பதாகவும் 113 படை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தம்பலகமம் படுகொலைகள்:
## 28 பொலீஸார் இதுவரை அடையாளம் காணப்பட்டனர்

திருகோணமலை, பெப். 16

திருகோணமலை மாவட்டம், தம்பலகமம் பாரதிபுரத்தில் எட்டுத்தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக இதுவரை 28 பொலீஸார் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று நடந்த அணிவகுப்பில் ஆறு பொலிஸாரும், ஒரு சார்ஜண்ட்டும், 3 ஊர்காவலரும் அடையாளம் காணப்பட்டனர்.

இன்றும் அடையாள அணிவகுப்பு தொடர்ந்து நடைபெறவிருக்கின்றது. (இ-8)

## சூராவத்தையில் தாக்குதல்!

கொழும்பு, பெப். 16

சுன்னாகம், சூராவத்தைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் பலியாகியதுடன் இருவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-9)

## பொறி வெடியில் ஊர்காவலர்

மட்டக்களப்பு, பெப். 16

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட எல்லையில் உள்ள வக்கிஎல்ல என்ற இடத்தில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் பொறி வெடியில் ஊர்காவல் படையினர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றும் ஒருவர் காயம் அடைந்தார். (இ-

# கிளிநொச்சியின் உண்மை நிலை அறிய பத்திரிகையாளர்கள் விஜயம்

## ஜக்கெட், தலைக்கவசம் அணிந்து அழைத்துச் செல்லப்பட்டனர்

சர்ச்சைக்குரிய கிளிநொச்சி யுத்தமுனைக்கு உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்கள் படையினரால் கூட்டிச் செல்லப்பட்டனர்.

கிளிநொச்சி மத்திய சந்தைப்பகுதி, ரயில் நிலையம் ஆகியவை வரை 'உதயன்' பத்திரிகையாளர் உட்பட அனைத்துப் பத்திரிகையாளர்களும் கூட்டிச்சென்று காட்டப்பட்டனர்.

ரயில் நிலையப்பகுதியிலிருந்து சுமார் எண்ணூறு மீற்றர் முதல் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் படையினரின் முன்னணி நிலைகள் தற்போது அமைந்திருப்பதாகவும்—

அதிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரப் பிரதேசம் எந்த தரப்பின் கட்டுப்பாட்டிலும் இல்லாத பிரதேசமாக (No Man's Land) இருப்பதாகவும்—

அதற்கு அப்பால், படையினர் முன்னர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த முன்னணிக் காவலரண்களில் தற்போது புலிகள் நிலைகொண்டிருப்பதாகவும்—தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி யுத்த முனைச் செய்திகள் குறித்து முன்னுக்குப் பின் முரணான செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து யுத்த முனைக்குப் பத்திரிகையாளரைக் கூட்டிச்செல்லும் முடிவுக்கு பாதுகாப்பு அமைச்சு வந்தது தெரிந்ததே.

இதற்காக—

உள்நாட்டு, வெளிநாட்டுச் பத்திரிகையாளர்கள் 36 பேர் நேற்றுக் காலை விசேட விமானம் மூலம் பலாலிக்கு அழைத்து வரப்பட்டனர்.

உதயன் பத்திரிகையாளர்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி நகருக்குள் புலிகளின் ஓர் அணி

யாழ்ப்பாணம், பெப். 16

கடந்த முதலாம் திகதி கிளிநொச்சியின் கிழக்குப் பகுதி மீது தாக்குதல் நடத்தி உள்புகுந்த விடுதலைப் புலிகளின் ஓர் அணி இன்னமும் அங்கு உள்ளதாக நம்பப்படுவதாக அப்பகுதியில் பணியாற்றும் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று அப்பகுதியைப் பார்வையிடச் சென்ற செய்தியாளர் குழுவிடமே அந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர் படகுகள் எரிக்கின்றனர் புலிகள்

யாழ்ப்பாணம், பெப். 16

முல்லைத்தீவுக் கடலில் மீனவரின் மூன்று படகுகள் கடற்படையினரின் தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது என்று புலிகளின் குரல் தெரிவித்தது

## பரீட்சை முடிவுகள் முழுமையாக இன்னும் வெளியாகவில்லை

கொழும்பு, பெப். 16

1997 ஆம் ஆண்டு நடந்த ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சை முடிவுகள் நேற்று முன்தினம் கொழும்பில் வெளியானபோதும், பூரணமான முடிவுகள் இன்னமும் வெளியாகவில்லை என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பரீட்சை முடிவுகள் தொடர்பாக நேற்று பரீட்

(10ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் ஆட்லறி பிரிவில் உள்ள முன்னாள் ராணுவ கப்டன் ஓர் தமிழர்

## உளவுக்காகவே படையில் இணைந்திருக்கலாம் என சந்தேகம்

யாழ்ப்பாணம், பெப். 16

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் தற்போது படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் ஷெல் தாக்குதலுக்கு தலைமை வகிக்கும் முன்னாள் இராணுவ கப்டன் கிளிநொச்சியைச் சேர்ந்த சுரேஷ் ராஜா என்னும் தமிழர் என்று தற்போது கருதப்படுகிறது.

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளுக்கு நேற்று விஜயம் செய்த பத்திரிகையாளர் குழுவிடம் அங்குள்ள இராணுவ அதிகாரிகள் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தனர்.

1996 ஆம் ஆண்டு முல்லைத்தீவு இராணுவ முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்த போது இந்த இராணுவ கப்டன் புலிகளிடம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.கா. அலுவலகம் மீது மலையகத்தில் கல் வீச்சு!

### தொண்டாவின் கொடும்பாவி எரிப்பு

கொழும்பு, பெப். 16

மலையக தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு குறித்து ஜனாதிபதி தலைமையில் காணப்பட்ட இணக்கத்துக்கு அதிருப்தி தெரிவித்து தோட்டத் தொழிலாளர்கள் எதிர்ப்புப் போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## முத்துக்குமாரு சுப்பிரமணியம்
(பொலீஸ் உத்தியோகத்தர்)

மாதகல் விபுலானந்தர் வீதியைச் சேர்ந்த முத்துக்குமாரு சுப்பிரமணியம் 14-02-98 சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு (நீர்ப்பாசன பரிசோதகர், கொட்டடி), செல்லப்பாக்கியம் தம்பதிகளின் மூத்த புதல்வனும், லதாவின் அன்புக் கணவரும், வஜீறா, ராணியின் (கண்ணா) அன்புத் தகப்பனாரும், இருபாகரவின் மாமனாரும், திலகவதி, நாகேஸ்வரி, சண்முகராஜா (Canada) ஆகியோரின் சகோதரரும், மருதமுத்துப்பிள்ளை, புஷ்பவல்லி (Canada) ஆகியோரின் மைத்துனரும், சுஜாத்தா, மதிவதனா, சர்மிதா (Canada) ஆகியோரின் பெரிய தந்தையும், பிரியதர்சினியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வவுனியாவில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

தகவல்:
ம நாகேஸ்வரி (கட்டி)
(சகோதரி)
சி. ம. பிள்ளை
(மைத்துனர்)

சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

(53411)

## திருமதி இந்திராணி நித்தியானந்தன்

திருமதி இந்திராணி நித்தியானந்தன் 14-02-98 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் துன்னாலை வடக்கு கரவெட்டியைச் சேர்ந்த நல்லையா நித்தியானந்தனின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற மதியாபரணம் தையல்நாயகி ஆகியோரின் மூத்தமகளும், நல்லையா, குமுதினி, யுவராஜ், யசோதினி, நளாயினி, றஞ்சினி, நிற்ஜினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நி. நல்லையா
(மகன்)

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(53404)

## நமசிவாயம் இராஜகோபால்

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும், இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் இராஜகோபால் அவர்கள் 15-02-98 ஞாயிற்றுக்கிழமை காலை இந்தியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நமசிவாயம் பாக்கியத்தின் சிரேஸ்ட புதல்வனும், வரதலட்சுமியின் அன்புக் கணவரும், வசந்தன், விஜி, காந்தன், ரூபன் (ஜேர்மனி), குலசீசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தருமலிங்கம், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகனும், திருக்கேதீஸ்வரன், சண்முகலிங்கம், நவரத்தினராஜா (ஜேர்மனி), யோகநாதன் (கனடா), ஆகியோரின் சகோதரனும். கிளி, இராஜேன் (உபதபால் அதிபர், மண்கும்பான்), தனேஸ் (ஆசிரியை சென். ஜேம்ஸ் மகளிர் கல்லூரி), சதீஸ், ஞானம், விக்கி, றஜனி, கீதா (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:-
ம. ஜேந்திரா
(சகலன்)

25/1, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(53413)

## பொன்னையா குணரத்தினம்
(துரை)

யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், டச்சுவீதி வீமன்காமம் தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் அவர்கள் 13-2-98 இரவு இறைவனடி எய்தினார்.

அன்னார் உலகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், துஷாரா (ஆண்டு 7, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி) ருத்திரநாத் (ஆண்டு 5, யாழ். இந்து ஆ. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற பொன்னையா பாக்கியம் தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ் சென்றசின்னத்துரை மற்றும் நாகம்மா தம்பதியரின் மருமகனும், கிருஷ்ணபிள்ளை (புகையிரத நிலைய ஓய்வு பெற்ற அதிபர்), மனோன்மணி (சுந்தரி), சேனாதிராஜா (நீர்ப்பாசன இலாகா ஓய்வுபெற்ற பொறியியலாளர்), ஜெகதீஸ்வரி (ஆசிரியை) ஆகியோரின் உடன்பிறந்த சகோதரரும், காலஞ்சென்ற இராசலட்சுமி, காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் தேவி, பாலச்சந்திரன், நகுலேஸ்வரி, காலஞ்சென்ற பஞ்சநாதன் மற்றும் தர்மராஜா, பாலச்சந்திரன், லோகேந்திரன், இராஜேஸ்வரன், கருணேஸ்வரி, குகதாசன், ரகுநாதன், நவரஞ்சன் ஆகியோரின் மைத்துனரும், குமாரவேல், வசந்தகுமார் ஆகியோரின் சகலரும், மித்திரா, வாசுகி, ராஜினி, ஜெனசனா, ஜெயா, கிவி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின்பூதவுடல் 14-02-98 சனிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
திருமதி குணரத்தினம் உலகேஸ்வரி
(மனைவி)
திரு. பொன்னையா சேனாதிராஜா
(சகோதரன்)

504, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

(53409)

## சமய நிகழ்வில்

வடமராட்சி, பெப். 16

துன்னாலை கோயிற்கடவை பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 25 ஆந்திகதி மஹா சிவராத்திரி தினத்தன்று வேட்டைத்திருவிழாவும், 26 ஆந்திகதி ரதோற்சவமும் நடைபெற்று 27 ஆந்திகதி தீர்த்தோற்சவத்துடன் மஹோற்சவம் நிறைவு பெறும். (ஐ-173)

## பொன் விழா ஞாபகார்த்த கட்டடம்

சண்டிலிப்பாய், பெப். 16

மானிப்பாய் கிழக்கு பாரதி சன சமூக நிலையம் ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்விட்டு இவ்வாண்டு நிலையக் காணியில் பொன் விழா ஞாபகார்த்த கட்டடம் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ஐ-135)

நெல்லியடி
**மஹாத்மா**
**வெண் திரையில்**
16-02-98முதல்
M.G.R. - ஜெயலலிதா நடித்த
**குடியிருந்த கோயில்**
காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2765)

**லிபேட்டி சினிமா**
அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்
திங்கள் முதல்
செவ்வாய் வரை
விஜயகாந் நடித்த
**உளவுத்துறை**
பழைய நேரம்
10-30, 2-30.
(53059)

## உள்ளக மருந்தகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். போதனா வைத்தியசாலையின் உள்ளக மருந்தகம் புதிய இடத்திற்கு மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

உள்ளக மருந்தகம் சேதமடைந்ததை அடுத்து இது மெடிக்கல் கிளினிக் மருந்தகத்துடன் இணைத்து செயற்படுத்தப்பட்டுவந்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக இடவசதியற்ற நிலையில் இயங்கி வந்த இந்த உள்ளக மருந்தகம் தற்போது தனியான ஒரு கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில் 26 ஆம் வார்ட்டாக இயங்கி வந்த தனியான கட்டடமே இதற்கென மாற்றப்பட்ட கட்டடமாகும். (ஐ-15)

## விளையாட்டுப் போட்டி

வடமராட்சி, பெப். 16

யாழ். புனித ஜேம்ஸ் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிபர் எஸ். எஸ். தங்கராஜா தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-173)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகமுத்து குமாரசாமி
(ஆச்சாரியார்)

காரைநகர் காளிகோயிலடி களபூமியைச் சேர்ந்தவரும், மன்னாரில் தற்போது வசிப்பவருமான சிவகுல திலகர் திரு வை. குமாரசாமி அவர்களின் அன்பு மனைவியான திருமதி நாகமுத்து குமாரசாமி அவர்கள் கடந்த திங்கட்கிழமை (9-2-98) அன்று மன்னாரில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11-2-98 இல் மன்னாரில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. சாம்பசிவம்
(சண்முகராசா)
(மகன்)

அம்மன் வீதி,
திருநெல்வேலி.
(53412)

## நாகமுத்து சபாரெத்தினம்
(நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி மாரிஅம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சபாரெத்தினம் அவர்கள் 15-02-98 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து தையலம்மை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற நடராசா - இராசம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற இலட்சுமி மற்றும் நாகரெத்தினம் ஆகியோரின் அன்புக் கணவரும், சிவக்கொழுந்து, இராசையா, காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் இராசம்மா, கணபதிப்பிள்ளை, காராளபிள்ளை, கனகம்மா ஆகியோரின் சகோதரரும், நாகேஸ்வரி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனரும், சந்திரமௌலி, சடாட்சரன், அங்குசபாலன், நிரஞ்சனா, ஞானசம்பந்தன், இராமகிருஷ்ணன் கமலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜினிதேவி, விமலேஸ்வரி, காலஞ்சென்ற கேதீஸ்வரி மற்றும் பரமேஸ்வரி, மலர்விழி, இதயராஜன், தாமோதரம்பிள்ளை ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16-02-98 இன்று திங்கட்கிழமை நண்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் திருநெல்வேலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. சடாச்சரன்
(ஜெகன்)
(மகன்)

"ஸ்ரீ ரங்கம்",
32/7, மாரியம்மன் லேன்,
திருநெல்வேலி.

(53407)

# பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்

நடத்தும்

## நாட்டுக் கூத்து, இசை நாடகப் போட்டி
**சித்திரை — 1998**

மேற்படி போட்டி சம்பந்தமாக
03 — 02 — 1998 உதயன் பத்திரிகை விளம்பரத்துக்கு மேலதிகமாக

**போட்டி விண்ணப்ப முடிவு திகதி: 23-02-1998 வரை பின்போடப்பட்டுள்ளது.**

பாடசாலைகளில் இருந்து விண்ணப்பிக்கும் நிகழ்வுகள் முதல் மூன்று பரிசுகளையும் பெறாதவிடத்து ஊக்குவிப்புப் பரிசுகளாக நாட்டுக்கூத்து, இசை நாடகம், காத்தவராயன், சிந்து நாட்டுக்கூத்து ஆகிய பிரிவுகளுக்கு முறையே இம்மூன்று பரிசில்கள் வழங்கச் செயற்குழு முடிவு செய்துள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

| 1ஆம் பரிசு: | 2ஆம் பரிசு: | 3ஆம் பரிசு: |
| --- | --- | --- |
| 1,250/- | 1,000/- | 750/- |

செ. மெற்றாஸ்மயில்
செயலாளர்,
பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்.

(53415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டில் 600பேர் கைது

## பொலீஸார் தீவிர தேடுதல்

கோயம்புத்தூர், பெப். 16

கோவையில் அடுத்தடுத்து இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து தமிழகம் எங்கும் பொலீஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது 600 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

தடை செய்யப்பட்ட முஸ்லீம் தீவிரவாத இயக்கங்களைச் சேர்ந்தோரும், சமூக விரோதிகள் பலரும் இவர்களில் அடங்குவர் என தமிழக பொலீஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

மாநிலம் முழுவதும் தீவிரவாதிகளைப் பொலீஸார் சல்லடை போட்டுத் தேடிவருகின்றனர். பதற்றம் நிலவும் இடங்களில் இராணுவத்தினர் பணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். கலகம் ஏற்படுத்த முயல்வோரை கண்டதும் சுட உத்தரவிடப்பட்டுள்ளது.

கோவையில் உக்கடத்திலும், கருணாநிதி நகரிலும் பல தடை நடவடிக்கைகள் அமுல் செய்யப்பட்டுள்ளன.

அல்உமா, ஜிகாத்குழு ஆகியவற்றின் தலைவர்களையும், தமிழக முஸ்லிம் முன்னேற்றக்கழகத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களையும் சென்னை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

(ஐ)

## கோவை நகர மத்தியில் நேற்றும் குண்டு வெடிப்பு!

### ஆறு தீவிரவாதிகள் பலி!!

கோயம்புத்தூர், பெப். 16

நேற்று முன்தினம் தொடர் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற கோவையில் நேற்றுக் காலை மற்றொரு குண்டுவெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது.

கோவை நகரின் மத்தியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் மறைந்திருந்த தீவிரவாதிகளை பொலீஸார் முற்றுகையிட்ட போது இச்சம்பவம் இடம் பெற்றது.

தகவல் ஒன்றை அடுத்து அந்த ஹோட்டலை பொலீஸார் முற்றுகையிட்ட போது அங்கிருந்தவர்கள் குண்டுகளை வீசியதாகவும் அச்சமயம் அவர்களில் ஆறு பேர் பலியானதாகவும் பொலீஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

(ஐ)

## பலத்த பாதுகாப்புடன் இன்று வாக்களிப்பு!

புதுடில்லி, பெப். 16

குண்டு வெடிப்புகளால் பதற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் பொதுத் தேர்தலின் முதற்கட்ட வாக்களிப்பு இன்று தமிழகத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நடைபெறவுள்ளது.

கோவையில் நடந்த வெடித் தலைகுனிய வைக்கும் சம்பவங்களால் நாடு முழுவதுமே அதிர்ச்சி அடைந்துள்ளது. தமிழக அரசு இரு தீவிரவாத இயக்கங்களை இப்போது தடைசெய்திருப்பது காலம் தாழ்ந்து எடுத்த முடிவு என்று தேர்தல் ஆணையர் ஜீ வி. கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார். குதிரை லாயத்தில் இருந்து குதிரைகள் வெளியேறிய பின்பு கதவை மூடுவது போன்ற செயல் இது என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை —

தமிழ் நாட்டில் இன்று வாக்குப் பதிவு நடைபெறவுள்ள 14 தொகுதிகளிலும் வாக்காளர்களின் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக நேற்று கொடிப் பேரணிகள் நடத்தப்பட்டன.

தமிழ் நாட்டிலும் ஐந்து யூனியன் பிரதேசங்களிலும் வேறு 14 மாநிலங்களிலும் இன்று முதற்கட்ட வாக்களிப்பு நடைபெறுகிறது. 222 மக்களவைத் தொகுதிகளில் மக்கள் வாக்களிப்பர்.

(ஐ)

## குண்டு வெடிப்புகளுக்குப் பொறுப்பேற்று முதல்வரை பதவி விலக்க கோருகிறார் ஜெயலலிதா

கோயம்புத்தூர், பெப். 16

தமிழ் நாட்டில் இடம்பெற்றுள்ள மோசமான குண்டு வெடிப்புச் சம்பவங்களினால் ஏற்பட்ட அனர்த்தங்களுக்குத் தார்மீகப் பொறுப்பேற்று முதல்வர் கருணாநிதி பதவி விலகவேண்டும்.

அ. இ. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா மேற்கண்டவாறு கோரியுள்ளார்.



குண்டு வெடிப்பைத் தடுக்கத் தவறியதற்கான பொறுப்பை முதலமைச்சர் கருணாநிதியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

இக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக மேலும் சில கட்சிகள் தமிழக அரசு மீது குற்றஞ் சாட்டியுள்ளன.

மக்கள் உடைமைகளுக்கும் உயிர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கத் தவறிய தி. மு. க. தொடர்ந்து பதவியில் நீடிக்கக் கூடாது என்று இந்து முன்னணியின் மாநில அமைப்பாளர் கூறியுள்ளார்.

குண்டு வெடிப்புச் சம்பவங்களின் பின்னர் அவசர அவசரமாகச் செயற்பட்ட தி. மு. க. அரசு முன் கூட்டியே மேலும் கவனத்துடன் செயற்பட்டிருந்தால் இந்த சம்பவங்களைத் தடுத்திருக்கலாம் என்று திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கே. வீரமணி தெரிவித்தார்.

(ஐ)

## பலியானோர் எண்ணிக்கை 55 ஆகியது

கோயம்புத்தூர் பெப். 16

தமிழ்நாடு கோயம்புத்தூரில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் பலியானோரின் எண்ணிக்கை 55 ஆக உயர்ந்துள்ளது. குண்டு வெடிப்பில் காயமடைந்த பலர் ஆஸ்பத்திரிகளில் உயிரிழந்தனர்.

கோவை நகரிலும் நகரை அண்டிய பகுதிகளிலும் நிறுத்தப்பட்டிருந்த கார்களிலும், முச்சக்கர வண்டிகளிலும் வைக்கப்பட்டிருந்த குண்டுகளே அடுத்தடுத்து வெடித்தன.

காயமடைந்த பொதுமக்கள் கோவையிலும், சென்னையிலும் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்பட்டது.

(ஐ)

## ரணிலை பதவி நீக்க ஐ.தே.க.வுக்குள் சதியாம்!

ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து இறக்கி விட்டு கட்சியின் முன்னாள் செல்வாக்கு மிக்க ஒருவரை நியமிப்பதற்கான சதிப்புரட்சி ஒன்றுக்கு ஒரு குழு திட்டமிட்டு வருவதாக அரச சார்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐ. தே. க. வின் 17 வருட ஆட்சிக் காலத்தில் கொலை, இலஞ்சம், ஊழல் போன்றவற்றில் பிரபல்யம் மிக்கவர்கள் மேற்படி குழுவில் இருக்கிறார்கள் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைக்கு எதிராக பிரசார வேலையில் மேற்படி குழு ஈடுபட்டுவருகிறது.

மேற்படி குழுவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆயுத விற்பனையாளர்கள் சட்ட விரோத செயல்களிலீடுபட்டு பெருந்தொகைப் பணம் சம்பாதித்தவர்களும் உள்ளனர்.

(அ)

## யூரியா உரத்தை கட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு

### கமநல சேவைகள் ஆணையாளர் தகவல்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கமநலச் சேவை கேந்திர நிலையங்களிலும் விவசாயிகள் தங்களுக்குத் தேவைப்படும் யூரியா உரத்தை எவ்வித கட்டுப்பாடுமின்றிப் பெற்றுக் கொள்ள முடியும் இதுவரை காலமும் 50 கிலோநிறையுள்ள ஒரு அந்தர் யூரியா உரம் 700 ரூபாவாக விற்கப்பட்டு வந்தது. கடந்த 10ஆம் திகதி தொடக்கம் இதன் விலை 470 ரூபாவாகவிலை குறைக்கப்பட்டுள்ளது.

யாழ் கமநலச் சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் க. சுந்தரேசன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார். கமநலச் சேவை கேந்திர நிலையங்களில் விவசாயிகளுக்கு விற்கப்படும் ஒவ்வொரு யூரியா பையிலும் கமநலச் சேவை கேந்திர நிலையத்தின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. வேறு தேவைகளுக்கு இதனைப் பயன்படுத்தாமல் இருப்பதற்காகவே இவ்வாறு பெயர் பொறிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அமோனியா உரம் மற்றும் உர வகைகளும் கமநலசேவை நிலையங்களில் போதியளவு கையிருப்பில் இருப்பதால் விவசாயிகள் தயக்கமின்றிப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும் என்றும் உதவி ஆணையாளர் மேலும்தெரிவித்தார்.

★ மலிவு விலையில் ★

அனைவரும் விரும்பிப் பயன்படுத்தும்

லீலா கலண்டர்கள், டயறிகள்

★ மொத்தமாகப் பெற்றுக் கொள்வோருக்கும் வியாபாரிகளுக்கும் விசேட கழிவுகள்

பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் கலண்டர்களை கொழும்பு விலையிலும் 15 வீதக் கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு விலை 100 ரூபா

கிடைக்குமிடங்கள்:

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மொடேர்ண் ஸ்ரோர்ஸ்
பஸ் நிலையம்,
நெல்லியடி.

கரன் புக்சென்டர்
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

பாமஸ்
பஸ் நிலையம்,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய, கடற்றொழில் விருத்திக்கு கெயர் நிறுவனம் பல திட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப். 16

கெயர் நிறுவனம் யாழ். மாவட்ட மக்களின் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதாக கெயர் நிறுவன திட்ட முகாமையாளர் எச். ஏ. அருள்ஞானம் தெரிவித்தார்.

கெயர் நிறுவன நடவடிக்கைகள் தொடர்பாக அவர் செய்தியாளரிடம் பேசுகையில் கூறியதாவது : —

விவசாய செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாய திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு பயிற்றுனர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டதுடன் தொடர்ந்தும் இத்தகைய பயிற்சிகள் வழங்கப்படும்.

யுத்த சூழ்நிலையால் விவசாய உற்பத்தியிலும் பலவருடங்கள் பின்னுக்குச் சென்றுவிட்டோம். எனவே விவசாயச் செய்கை ஊக்குவிக்கப்பட வேண்டுமென்பதில் ஆர்வமாக இருக்கிறோம்.

மேலும் சிறந்த பயிற்சிகளை வழங்கும் பொருட்டு விவசாய திணைக்களத்திற்கு விவசாய உபகரணங்களும் கெயரினால் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து மரக்கறி, பருப்பு வகைகள், சணல் போன்றவற்றின் தரமான விதைகளைத் தருவித்து யாழ். மாவட்டத்திலுள்ள ஒன்பது பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள விவசாயிகளுக்கு வழங்கியுள்ளோம்.

பிரிட்டிஷ் அரசின் நிதி உதவியுடன் பளை, சாவகச்சேரி, சண்டிலிப்பாய், சங்கானை போன்ற இடங்களில் குடும்பத் தலைவர்களை இழந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 500 விவசாயக் குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு இவர்களுக்கு மரக்கறி விதைகள், 5 வகையான பழப்பயிர்கள் வழங்கப்படுவதுடன் விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டு இவர்களை ஊக்குவிப்பதற்கு திட்டமிட்டுள்ளது. இதற்கென 50 நீரிறைக்கும் இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்படும்.

இந்த 500 குடும்பங்களுக்கும் நிரந்தர வருவாயை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தேவையான உதவிகள் வழங்கப்படும்.

பெண்களை விவசாயத் துறையில் ஈடுபடுத்தும் திட்டமொன்றையும் கெயர் நிறுவனம் கொடுக்கவுள்ளது.

இதற்கென விவசாயத்துறையில் இந்தியாவில் விசேட பயிற்சி பெற்ற ஒரு பெண் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாக விவசாயிகளுக்கு கடன் வழங்கும் திட்டம் ஒன்றும் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மீன்பிடித்துறையை ஊக்குவிக்கும் நோக்குடன் கடற்றொழிலாளர்களுக்கு கடனுதவிகளும் மற்றும் கடற்றொழில் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதத்தில் கடற்றொழிலாளர் சங்கங்கள் ஊடாக இக்கடனுதவிகள் வழங்கப்படும்.

கடற்றொழில் ஊக்குவிப்பு தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கென விசேட ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 16

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் மார்ச் மாதம் 15 ஆம் திகதி காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (ஐ-4)

## போரூட் நூலகம்

யாழ்ப்பாணம், பெப். 16

மருத்திதுறை தம்பசட்டியில் இயங்கிய போரூட் நூலகம் அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலைய கட்டடத்தில் பாரதிதாசன் நூலகம் என்னும் பெயரில் இயங்கிவருகிறது.

## அகதிகள் இடமாற்றம்

வவுனியா, பெப். 16

வவுனியா கோழிக்கூடு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 80 பேர் பூந்தோட்டம் தமிழ்க் கலவன் அரசினர் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (இ-9)

## 4 கால்களுடன் கோழிக்குஞ்சு

தென்மராட்சி, பெப். 16

நான்கு கால்களுடன் அதிசய கோழிக்குஞ்சு ஒன்று சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கைப் பகுதியில் பொரித்துள்ளது.

அக் கோழிக்குஞ்சுக்கு முன்னுக்கும் பின்னுக்கும் தலா இரண்டு கால்கள் வீதம் காணப்பட்டன. மற்றக் குஞ்சுகள் போலவே இக் கோழிக்குஞ்சும் தாயுடன் ஓடித்திரிகிறது. இந்த அதிசய கோழிக்குஞ்சை மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். (ஐ-117)

## வலயம்-2 பாடசாலைகளின் மாணவரிடையே சதுரங்கப் போட்டி

வலிகாமம் தெற்கு, பெப். 16

யாழ்ப்பாணக் கல்வி வலயம் இரண்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே இவ்வருடம் சதுரங்க சுற்றுப் போட்டி நடைபெற உள்ளது.

ஆண், பெண் இருபாலாருக்குமிடையே போட்டிகள் நடைபெறும்.

தனிப்பட்டவர்களுக்கான சதுரங்கப் போட்டிகள் இம்மாதம் 27 ஆம் திகதியும்— அணிகளுக்கிடையிலான போட்டிகள் இம்மாதம் 28 ஆம் திகதியும் கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறும். இப் போட்டிகள் சர்வதேச சதுரங்க சம்மேளன விதிமுறைகளுக்கமைய நடைபெறும்.

விண்ணப்பங்களை இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராஜா அறிவித்துள்ளார். (ஐ-152)

## கண்டியில் தியவதன நிலமேக்கு எதிராக ஊர்வலம்

கொழும்பு, பெப். 16

கண்டி தலதா மாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரட்ன பதவி துறக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் கண்டியில் ஊர்வலமொன்று நடைபெற்றது. ஊர்வலம் முடிவடைந்த பின்பு தியவதன நிலமேக்கு எதிராக 10 குற்றச்சாட்டுகள் அடங்கிய மகஜர் ஒன்று மல்வத்த பீடத்திடம் கையளிக்கப்பட்டது.

## கள் அருந்தியவர்களிடையே கைகலப்பு! 4 பேர் காயம்!

தென்மராட்சி, பெப். 16

போயா தினத்தன்று ரகசியமான இடத்தில் வைத்து கள் அருந்தியவர்களிடையே ஏற்பட்ட கைகலப்பினால் மூவர் காயமடைந்த சம்பவம் சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்றது.

கத்தி வெட்டுக்கு இலக்கான சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த கி. திலகநாதன் (வயது 39) இவரது தம்பியான சி. லோகநாதன் (வயது 34) போத்தல் அடியினால் காயமடைந்த சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த நா. கந்தசாமி (வயது 59) ஆகியோர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் (ஐ-117)

## வயல்களில் இரவில் நெல் திருட்டு

கொழும்புத்துறை, பெப். 16

அராலி, பொன்னாலை, மூளாய், தொல்புரம் ஆகிய பகுதிகளில் இரவு நேரத்தில் நெற்பயிர்கள் திருடர்களால் அறுவடை செய்யப்படுகின்றன.

இத்திருட்டுச் சம்பவங்களால் வயல்களின் உரிமையாளர்கள் கவலையடைந்துள்ளனர். (ஐ-30)

## மேலும் இருவர் அடையாளம் காணப்பட்டனர்

யாழ்ப்பாணம், பெப். 16

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பாரதிபுரத்தில் எட்டுத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் மேலும் இருவர் அடையாளம் காணப்பட்டனர்.

திருகோணமலை நகரசபை மண்டபத்தில் பதில் நீதிவான் சுபாஜினி வரதன் முன்னிலையில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் கந்தளாய் பொலிஸ் அதிகாரி வஸந்த விக்கிரமசிங்கவும், ஒருபொது மகனும் பொலிசாரால் அடையாளம் காணப்பட்டனர். (இ-9)


## வாழ்த்துகின்றோம்

எவறெஸ்ற் கல்வி நிலையம்
இணுவில்

1997 ஐந்தாம் ஆண்டு
புலமைப் பரிசில் பரீட்சையில்

சித்தியடைந்து நிறுவனத்திற்கு பெருமை தேடித் தந்த உங்களையும், கற்பித்த ஆசிரியர் ஆ. அருட்பிரகாசபிள்ளை அவர்களையும் பாராட்டுகின்றோம்.

பாராட்டுப் பெறுவோர்:-

1) ப. அஜந்தன்
2) இ. றஜிந்தன்
3) பா தர்சினி
4) ஸ்ரீ. சுவர்ணாசனா
5) சி. நிதேசன்
6) சு நிசாகன்
7) ப. சஜந்தன்
8) பா. தர்சியா
9) சி. கோபிதன்
10) இ. யாழினி
11) இ. சித்துஜா

இயக்குநர்,
ஆசிரியர் குழாம்.
இணுவில். (53398)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் அருளம்பலம் சிவஞானசுந்தரம்
[B.A. (HONS) Dip in SOCIAL WORK]
(சிரேஷ்ட சமூக சேவை அதிகாரி)

குப்பிளான் மண்ணில்: 10 — 12 — 1942
மல்லாவி மண்ணுக்கு: 17 — 01 — 1998

என்றும் எல்லோருக்கும் இனியவனே!

சமூக சேவைக்கே உன்னை முழுமையாக அர்ப்பணித்த உத்தமனே! வன்னிப் பகுதியில் எமது மக்கள் வாடியதை அறிந்து அங்கு விரைந்து அல்லற்பட்டவர்களினதும், நலிந்தவர்களினதும் நல்வாழ்வுக்காய் மகத்தான மனித நேயப் பணியில் உழைத்து உருக்குலைந்து மல்லாவி மண்ணுக்கே உரமானாய்!

உன்னை இழந்து ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் உன தருமை மனைவி, மக்களோடு நண்பர்கள் நாமும் இணைந்து உனது ஆத்ம சாந்திக்காய் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மு. தர்மலிங்கம்
தலைவர்,
சமூக சேவை அலுவலர் சங்கம்,
வடக்கு — கிழக்கு மாகாணம்.

[53399]



## தையற் பயிற்சி ஆரம்பம்

அறவழிப் போராட்டக் குழுவினால் நடத்தப்படவுள்ள யுவதிகளுக்கான தையற் பயிற்சி நெறி இன்று காலை 11 மணிக்கு நுணாவில் கிழக்கிலுள்ள அறவழிபயிலகத்தில் ஆரம்பமாகின்றது.

தலைவர்
திரு. வீ. ஜீ. தங்கவேல்
(தலைவர் அறவழி)

பிரதம விருந்தினர்
ஸ்ரீ எஸ். கருணானந்தம்
(தலைவர், ஸ்ரீ பகவான் சத்யசாயி பாபா சேவை நிலையம்)

எம். கே. ஜீவகதாஸ்
கௌரவ செயலாளர்

அறவழிப்போராட்டக் குழு,
கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி,

(53877)



## DEATH ACKNOWLEDGMENT

The members of the Family of late
**Professer S. MAGESWARAN**

Wish to express our sincere thanks to the Doctors and Nurses of the General Hospitals of Jaffna and Colombo who treated Professer Mageswaran during his illness. We also thank the Secretary of Ministry of Defence, Staff of Civil Affairs Office (Jaffna) and the Town Commander (Jaffna) for arranging transport. Our gratitude are also due to Staff and Students of the University of Jaffna, Staff and Students of the many Schools of Jaffna, Relations, Friends and Neighbours who attended the funeral, sent floral tributes and messages of condolence and helped in numerous other ways during our recent bereavement.

We regret our inability to thank them individually.

Professer [Mrs] Rajeswary Mageswaran.

(53383)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ. தே. கவின் மாற்று யோசனை
# உடனடியாக சாத்தியம் இல்லை
## மார்ச் மாதத்துக்குப் பின்பே சமர்ப்பிக்கப்படலாம்

கொழும்பு, பெப் 16

அரசு முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல்யோசனைகள் குறித்த ஐ. தே. கவின் மாற்று யோசனைகள் அடுத்த மாதத்துக்குள் சமர்ப்பிக்கப்படுவது சாத்தியமில்லை என்று ஐ. தே. க. சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அரசின் யோசனைகள் குறித்து அரச சார்பற்ற அமைப்புப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சின் போதே அவர் இதைத் தெரிவித்தார்.

ஐ தே க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கலந்து கொண்ட குழுவில் டிரோன் பெர்னாண்டோ, மகிந்த சமரசிங்க, தயாவல் பொல ஆகியோர் இடம்பெற்றனர்.

அரச சார்பற்ற அமைப்புக்கள் சார்பில் கலாநிதி ஜெயதேவ உயன்கொட, சாள்ஸ் அபயசேகர, றொகான் எதிரிசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசின் யோசனைகள் குறித்து விரிவாகவும், ஆழமாகவும் ஆராய வேண்டியுள்ளதாலும் —

அதன் பின்னர் ஐ தே. க. நாடாளுமன்ற, செயற்குழு மட்டங்களில் ஆராயப்பட வேண்டியுள்ளதாலும் — மாற்று யோசனைகள் அடுத்த மாதத்துக்குள் சமர்ப்பிக்க முடியாது என்று ஐ. தே. க. பிரமுகர்கள் தெரிவித்தனர்.

(இ-3-7)

### தீவுப்பகுதி அதிபர்கள்
# ஆவணம் இல்லாமலேயே ஓய்வூதியம் பெற ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ்ப்பாணமாவட்டத்தைச் சேர்ந்த தீவுப்பகுதிப் பாடசாலைகளில் அதிபர்களாக இருந்து இளைப்பாறியவர்களுக்கு அப்பகுதிகளில் உள்ள பிரத்தியேக நிலைமையைக் கருத்திற்கொண்டு ஆவணம் இல்லாமலேயே ஓய்வூதியம் வழங்குவதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆம் திகதி கொழும்பில் ஜனாதிபதிசெயலகத்தில் நடைபெற்ற 'வடபகுதியில் இயல்பு நிலை ஏற்படுத்துதல்' தொடர்பான அரச அதிகாரிகளுக்கான கூட்டம் ஒன்றிலேயே இத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போன்ற சலுகையை யாழ்ப்பாணக் குடா நாட்டில் ஓய்வு பெறும் பாடசாலை அதிபர்களுக்கும் செயற்படுத்த கல்வி உயர் கல்வி அமைச்சைக்கோருவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டதாக பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்களின் இணைப்பாளர் நா க. சண்முகநாதபிள்ளை அறிவித்துள்ளார். (இ-7)

# பாலர் பாடசாலை கட்டடம் மந்துவிலில் திறந்துவைப்பு

தென்மராட்சி, பெப். 16

யுனிசெப் நிறுவனத்தினரால் 75 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மந்துவில் கிழக்கு பாலர் பாடசாலை கட்டடம் தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக உதவியாளர் செ. முருகையாவினால் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை பெற்றோர் சங்கத் தலைவர் இ. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் க. நல்லதுரை, மந்துவில் பகுதி கிராம அலுவலர் வை. இராசரத்தினம், சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் வே. கிருஷ்ணன் உட்பட பலர் உரையாற்றினர்.

இப் பாலர் பாடசாலைக்கான தளபாடங்கள் சாவகச்சேரி பிரதேச சபையினரால் ரூபா 25 ஆயிரம் செலவில் கொள்வனவு செய்து வழங்கப்பட்டன. (இ-117)

# பிரிவுபசார விழா

தென்மராட்சி, பெப். 16

பளைப் பிரதேச சபையின் விசேட ஆணையாளராகக் கடமையாற்றி இடமாற்றல் பெற்றுச்சென்ற பா. செந்தில் நந்தனனுக்கு பிரதேச சபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் கடந்த வியாழக்கிழமை பிரிவுபசாரவிழா நடத்தப்பட்டது.

சபைச் செயலாளர் கு. ந. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பளைப் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி, பளை ஆஸ்பத்திரி வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் ச. அம்பிகைபாலன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(இ 117)

# புலிகளின் படகுகள் மீது தாக்குதல் என அறிவிப்பு

கொழும்பு, பெப். 16

இலங்கையின் வடகிழக்குக் கரையோரத்தில் புல்மோட்டைக்குச் சமீபமாக உள்ள கடற்பகுதியில் கடற்படையினரின் தாக்குதலால் விடுதலைப் புலிகளின் ஐந்து படகுகள் அழிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

கடந்த வெள்ளி இரவு சுமார் 11.80 மணியளவில் விடுதலைப் புலிகளின் மூன்று படகுகள் வருவதை அவதானித்த கடற்படையினர் அவற்றின் மீது தாக்குதலை நடத்தினர் என்றும் —

பின்னர் ஐந்து மணித்தியாலங்கள் கழித்து மீண்டும் இரு படகுகள் கடற்படையால் தாக்கப்பட்டன என்றும் —

இந்த இரு தாக்குதல்களிலும் விடுதலைப் புலிகளின் மூன்று படகுகள் முற்றாக அழிக்கப்பட்டதாகவும் —

இரண்டு படகுகள் பலத்த சேதத்துக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இதில் பயணம் செய்த சுமார் 20 விடுதலைப் புலிகளும் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் கடற்படையினர் மீது பதில் தாக்குதல்களை மேற்கொண்ட போதும் கடற்படையினருக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (இ7-9-10)

# கமநலசேவை நிலைய சாரதி துப்பாக்கிச் சூட்டில் காயம்
## வயலில் இருந்து திரும்புகையில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப் .16

வயலில் சூடடித்துவிட்டு, டிராக்டருடன் வீடு திரும்பியவர் இடையில் இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிப்படுகாயமடைந்தார்.

சுழிபுரம் மத்தியில் கடந்த வெள்ளி இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற இச் சம்பவத்தில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த குமரகுரு நாகராசா (வயது 34) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

உடுவில் கமநலசேவைநிலையத்தில் டிராக்டர் சாரதியாக பணிபுரியும், இவர் கடமையில் ஈடுபட்டுத் திரும்பிய வேளையே இந்த துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் இடம்பெற்றது.

டிராக்டரை ஓட்டிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த வேளை இருட்டில் மறைந்திருந்த இனந்தெரியாதவர்களால்துப்பாக்கியால் இவரைச் சுட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வயிற்றுப்பகுதியில் படுகாயமடைந்த இவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-139-28-15)

# செல்வா நூற்றாண்டு விழா மாணவரிடையே போட்டிகள்
## புளொட் அமைப்பு ஏற்பாடு

தமிழ் தேசிய இனத்தின் தந்தை மூதறிஞர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் நூற்றாண்டு விழாவை யாழ்ப்பாணத்தில் விரிவான முறையில் நடத்துவதற்கு புளொட் அமைப்பின் அரசியற் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

தந்தை செல்வாவின் நூற்றாண்டு விழாவின் முன் நடவடிக்கையாக கடந்த வருடம் புளொட் அமைப்பினரால் தந்தையின் நினைவுத்தூபி புனரமைக்கப்பட்டதுடன் திருமலையிலும் வவுனியாவிலும் கலைகலாசாரப் போட்டிகள், கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இவ்வருடமும் மார்ச் 31-ம் திகதி நூற்றாண்டு விழாவை யொட்டி இரத்ததானம், சிரமதானம், பாடசாலை மாணவர்கள் மட்டத்திலான கவிதை, கட்டுரை, பேச்சுவிவாதம் போன்ற போட்டிகளை புளொட் நடத்தவுள்ளது. போட்டிகள் பற்றிய விவரங்கள் பத்திரிகைகள் மூலம் பின்னர் அறிவிக்கப்படும் — என்று புளொட் அமைப்பு விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# விஞ்ஞான சங்க தலைமை ஏற்பு உரை

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். விஞ்ஞானச் சங்கத்தின் தலைமை ஏற்பு உரை நிகழ்வு நாளை மறுதினம் மாலை 3 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்.

இந்நிகழ்வில் மருத்துவக் கல்வியில் சீர்திருத்தம் என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் பேராசிரியர் எஸ். வி. பரமேஸ்வரன் உரை நிகழ்த்துவார்.

(இ-5)

# சிறுவர் அபிவிருத்தி செயல்திட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப். 16

யாழ். மாவட்டத்தில் யுத்தம் மற்றும் இயற்கையினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவுவதுடன் சிறுவர்களை மேம்படுத்தும் பொது மேம்பாட்டு செயல்திட்டங்களும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டது.

சிறுவர் அபிவிருத்தி நிலையத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

யுத்தத்தினால் பெற்றோரை இழந்த சிறுவர்கள் மற்றும் காணாமல் போனகைதான பெற்றோர்களின் பிள்ளைகள் என யாழ். மாவட்டச் சிறுவர்கள் பெரும் பாதிப்பை எதிர் நோக்கியுள்ளனர்.

மேற்குறிப்பிட்ட காரணங்களினால் பாடசாலைக்குச் செல்லுதல் இடைநிறுத்தம், போஷாக்கின்மை, பிறப்பு பதியப்படாமை உட்பட பல வழிகளிலும் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சிறுவர்கள் தொடர்பான விவரங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக திரட்டப்பட்டு அவர்களின் நிலையை மேம்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(இ-5)

# பெரும்பாலான தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பவில்லை

யாழ்ப்பாணம், பெப் 16

மலையகத்தில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் கடந்த வெள்ளி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோதிலும்நேற்று முன்தினம் அனேக தொழிலாளர்கள் வேலைக்கு சமுகம் தரவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதிக்கும், தோட்டத் துரைமார், தொழிற்சங்க பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து வேலை நிறுத்தத்தை கைவிடுவதாக இணக்கம் காணப்பட்டிருந்தது.

எனினும் தமது கோரிக்கைப்படி சம்பளத் தொகை 105 ரூபாவாக அதிகரிக்கப்படும் வரை தாம் வேலைக்குத் திரும்பப் போவதில்லை என சில தொழிற்சங்கங்கள் இப்போது அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தலவாக்கொல்ல, பொகவந்தலாவ ஆகிய பகுதிகளில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் நேற்று பெரிய ஆர்ப்பாட்டங்களை நடத்தியதாகவும் —

ஆர்ப்பாட்ட முடிவில் அமைச்சர் தொண்டமானின் கொடும்பாவியை எரிக்க முயற்சித்ததாகவும் — செய்திகள் தெரிவிக்கின்றன.

(இ-21-9-10)

# வேலை நிறுத்தத்தால் 72 கோடி ரூபா இழப்பு!

சம்பள அதிகரிப்புக் கோரி தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்த நாள்களில் அரசு தினமொன்றுக்கு 8 கோடி ரூபா அந்நியச் செலாவணியை இழந்துள்ளது.

9 நாள்கள் வேலை நிறுத்தம் காரணமாக 72 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

வேலை நிறுத்தம் நீடிக்கப்பட்டிருந்தால் அரசு மேலும் பொருளாதார நெருக்கடிகளை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என்று பொருளாதார நிபுணர் கள் தெரிவித்தனர்.

(ஐ-21)

# புடலங்காய் மூடைக்குள் கிரனேட்

பளையிலிருந்து பஸ்ஸில் கொண்டுவரப்பட்ட புடலங்காய் மூடைக்குள் கிரனேட் இருந்தது. கொடிகாமம் சோதனை சாவடியில் கண்டு பிடிக்கப்பட்ட சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

புடலங்காய் மூடையைக் கொண்டு வந்த வியாபாரி தடுத்துவைக்கப்பட்டார்.

பளையிலிருந்து கொண்டு வரப்பட்ட புடலங்காய் மூடை இத்தாவில், எழுதுமட்டுவாள், மிருசுவில் ஆகிய சோதனைச் சாவடிகளில் சோதனையிடப்பட்டதாகவும் —

இதே மூடையை கொடிகாமத்தில் அவிழ்த்தபோது புடலங்காய்களின் மேல் தெரியக்கூடிய இடத்தில் கிரனேட் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

# உதைபந்தாட்ட பயிற்சி முகாமை ஏப்ரலில் நடத்த ஏற்பாடு

பருத்தித்துறை, பெப். 16

யாழ். மாவட்டத்தில் எதிர் வரும் ஏப்ரல் முற்பகுதியில் உதைபந்தாட்ட ஆசிரியர்களுக்கான வதிவிடப்பயிற்சி முகாம் ஒன்று யாழ். மத்திய கல்லூரியில் நடத்தப்படவுள்ளது.

மத்திய அரசாங்கத்தின் கல்வி, உயர்கல்வி அமைச்சின் அனுசரணையுடன வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு இம் முகாமை நடத்தவுள்ளதாக கல்வி மாகாண அமைச்சின்செயலாளர் சுந்தரம் டிவகலா தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வில் உயர்கல்வி அமைச்சின் பிரதி விளையாட்டுத் துறைப்பணிப்பாளர் நாலகம் அனில்ஜயவீரவும் கலந்து கொள்வார். இதற்கான வளஆளணியினரை இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் வழங்கவுள்ளது.

(ஐ-118)

# இலவச நூல் விநியோகம்

செம்பியன்பற்று, பெப். 15

மருதங்கேணி கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் கடந்த 12 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டுவருகின்றன.

(ஐ 36)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### யாழ்ப்பாணம்

14-2-98 அன்று சஞ்சீவியில் 'யாழ்ப்பாணம்' சிறுகதை வாசித்தீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள். நாடகம் எழுதுவது எப்படி? எங்கும் கிடைக்கும். ரூபா 50/-

[53387]

### திருத்துதல்

சகல விதமான தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: R. மருதம், 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம் [53393]

### வைதீக வகுப்பு

நடைபெற்றுவரும் வைதீக வகுப்பில் உபநயனம் பற்றிய வகுப்பு நடைபெறுகின்றது. கலந்து கொள்ள விரும்பும் அந்தணர்கள் தொடர்பு கொள்ளவும்: சா. சோமசபேசக்குருக்கள், சிவகாமி அம்மன் கோயில், இணுவில்.

[53390]

### விற்பனைக்கு

ஆர்மோனியங்கள், ஓர்கன் (Pss - 290), கிற்றார்கள் (Box), புல்லாங்குழல்கள், மிருதங்கம் ஆகியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: சரவீணா, 23, குறோசர் வீதி, சுண்டுக்குளி [53227]

## மரத்திலிருந்து விழுந்தவர் மரணம்

ஆடுக்கு குழை வெட்ட ஏறியவர் மரத்தில் இருந்து தவறிவிழுந்து மரணமானார்.

யாழ்ப்பாணம் ஒட்டுமடம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பொன்னையா குணரத்தினம் (வயது 55) என்பவரே மரணமானவராவார்.

கடந்த 2 ஆம் திகதி விழுந்து படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் சிகிச்சை பலனளிக்காது நேற்றுமுன்தினம் அங்கு மரணமானார்.

(இ17-15)

### வாத்தியக் கருவி

வாத்தியக்கருவிகளை திருத்துவதற்கு நீண்டகால அனுபவம் மிக்கவர்கள் இராஜன் இசையகம், 198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். கருவிகளுக்கான கம்பிகளும் பெற்றுக்கொள்ளலாம்.

[53406]

### மணமகள் தேவை

கொழும்பில் தனியார் நிறுவனமொன்றில் கணக்காளராக (CIMA) தொழில் புரியும் 30 வயதுள்ள யாழ். சைவ இந்து மணமகனுக்கு (நட்சத்திரம் பூசம் 2 ஆம் பாதம் கிரகபாவம் இல்லை) 27 வயதுக்குட்பட்ட அழகிய நற்குணமுள்ள படித்த மணமகள் தேவை. படம் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும் C/O உதயன் 695.

[53405]

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பத்மாவதி சின்னத்துரை

மலர்வு: 25 — 05 — 1917

உதிர்வு: 04 — 02 — 1990

திதி: 16 — 02 — 1998

பாசமிகு அன்பின் தாயே!
பண்பின் உறைவிடமே!
ஆண்டுகள் எட்டு அகன்றாலும்
அகலாதே உங்கள் நினைவு
எம் நெஞ்சில் என்றும்

உங்கள் ஆத்ம சாந்திக்காக நித்தமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சகோதரர், மச்சாள்,
மருமகன், மருமகள், மகன்,
மகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

வீரதேவன் வளவு,
ஒடைலேன்,
வண்ணார்பண்ணை.

(53397)

## யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

முறைசாராக் கல்வி தொழிற்றிறன்

## பயிற்சி நெறி-1998

பயிற்சி நெறி-சுருக்கெழுத்து தட்டெழுத்து (தமிழ்)

விண்ணப்பப் படிவங்களை கல்லூரியில் பெற்று 19-02-98 -க்கு முன் ஒப்படைக்கவும்.

-அதிபர்

(இ/2887)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 08 — 04 — 1920

மறைவு: 16 — 02 — 1996

### அமரர் சின்னத்தம்பி செல்லப்பா

கொக்குவில்

(முன்னாள் மின்சார சபை ஊழியர், யாழ்.)

பாசமுள்ள தந்தையே! நீங்கள் மறைந்து ஆண்டு இரண்டு ஆயினும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றென்றும் மறையாது. எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் நிற்கும் ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல வாலை அம்மனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி கனகம்மா,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரன்மார், பேர்த்திமார், சகோதரர்,
உற்றார், உறவினர்கள்.

தகவல்:
திருமதி லவன், கொக்குவில். (49915)

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ.)

## கணக்காளர்

## நிரந்தரப் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

1. சம்பள அளவுத்திட்டம்:

104/09 $\frac{3200 - 5200}{90 \times 10 - 110 \times 10}$

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமையுடையவரிடம் (இருபாலாரிடம்) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் கல்விச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் ''தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை'' என்ற விலாசத்திற்கு 27-02-98ற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பித்து உறுதிப்படுத்தவேண்டும்.

2. வயது 23 தொடக்கம் 40 வரை

கூட்டுறவுச் சங்கங்களில் கடமை புரிபவர்களுக்கு வயதெல்லை இடையாது.

தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பணிப்பாளரின் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்காளர்/ உட்துறைக் கணக்காய்வாளர் பதவியில் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவமும், கூட்டுறவுப் பணியாளரின் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் உட்துறைக் கணக்காய்வாளர்/ கணக்குப் பதிவாளர்/ கணக்குத்துறை அல்லது கணக்காய்வுத்துறை எழுதுநர் பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவம்;

அல்லது

ஆ. ஐக்கிய இராட்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இறுதி நிலைப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்குத்துறை/ எண்பார்வைத்துறையில் மேற்பார்வைப் பதவியில் நான்கு வருடத்திற்குக் குறையாத அனுபவமும்;

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்)/ க. பொ. த உயர்தரத்தில் கணக்கியலை உள்ளடக்கிய மூன்று பாடங்களில் சித்தியும் கணக்குத்துறை/ எண்பார்வைத்துறையில் மேற்பார்வைப் பதவியில் 06 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

தலைவர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்.

14-02-1998

(சி/2392)

## 10-வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவபாக்கியம் சண்முகம்

தோற்றம்: 18 - 12 - 1906

மறைவு: 08 - 03 - 1988

திதி: 16 — 02 — 1998

இருக்கும் வரை — எம்
இல்லங்களுக்கு ஒளியானாய்
இறந்த பின்பு — எம்
இதயங்களுக்கு ஒளியானாய்.

உங்களை நினைவு கூரும்:

புவனேஸ்வரி, குமாரசன், சிவதாசன், சிவயோகலட்சுமி தேவி, குகதாசன், தேவி, தர்மதாசன், கிருபாசக்தி, ஜெயதாசன், சுலோசனா, மீரா, விஜயகுமார், தபோதினி, முகுந்தன், மனோகரன், கௌரி, யாழினி, யோகினி, சோபிகா, சோபிதா.

இருபாலை கிழக்கு.
கோப்பாய்.

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

(53340)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று 600 பேர் படையில் இணைந்தனர்

யாழ்ப்பாணம், பெப். 16

இராணுவம், பொலீஸ் ஆகியவற்றில் இருந்து வெளியேறிச் சென்றவர்களை மீண்டும் வந்து சேர்ந்துவிடுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்பை ஏற்று அவர் அழைப்புவிடுத்த 48 மணிநேரத்தில் 600 பேர் மீண்டும் சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளியேறிச் சென்றவர்களை படையில் சேருமாறு வழமையாக பாதுகாப்பு அமைச்சே அழைப்பு விடுகின்ற போதும் ஜனாதிபதி முதன்முதலாக விடுத்த இந்த அழைப்பை ஏற்று அவர்கள் மீண்டும் படையில் சேர்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது சேர்ந்து கொண்டுள்ள படையினர் எவ்வித விசாரணைகளோ, தண்டனைகளோ இன்றி படையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். மேலும் பலர் விரைவில் படையில் சேர்வார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-9)

## உ.அ. அதிபர் வராததால் அலுவலகம் செயல் இழப்பு

வாரத்தில் ஒருநாள் மட்டும் திறக்கப்படும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் கடந்த மூன்று வாரங்களாக உதவி அரசாங்க அதிபர் வருகை தராததால் செயல் இழந்து காணப்படுகிறது.

தமது தேவைகளுக்காக கையொப்பம் பெறச் செல்லும் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு வருடங்களாக இந்த அலுவலகம் இதே நிலையிலேயே இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-117)

வாழைச்சேனையில் உள்ள

## கடதாசி ஆலையை மூடும் ஆபத்து!

மட்டக்களப்பிலுள்ள வாழைச்சேனை காகித ஆலையை மூடும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் கடதாசிக்கான இறக்குமதித் தீர்வை குறைக்கப்பட்டமையினால் வாழைச்சேனை கடதாசி ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட 20 கோடி ரூபா பெறுமதியான 400 தொன் கடதாசி விற்பனையின்றித்தேங்கியுள்ளது.

இதனால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலையை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

40 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டபோது பயன்படுத்திய கருவிகளின் துணைகொண்டு உற்பத்தியாகும் உள்ளூர் கடதாசி உற்பத்தி வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் கடதாசிகளின் தரத்திலும் குறைவாக இருக்கின்ற போதிலும் அரசு தொழிற்சாலை உபகரணங்களை நவீனமயப்படுத்தி கடதாசியை தரமானதாக்க முயற்சிக்காது தரமான கடதாசிகளை இறக்குமதித் தீர்வையை தீர்வைக்குட்பட வழங்கியதன் மூலம் இக்கடதாசி ஆலையை இழுத்து மூடும் அபாய நிலையை உருவாக்கியுள்ளதாக ஏஜென்ஸிசெய்தி ஒன்று தெரிவித்தது.

94 ஆம் ஆண்டு வரை இலாபத்திலியங்கிய வாழைச்சேனை கடதாசி ஆலை இன்று இழுத்து மூடும் நிலைக்கு உள்ளாகியிருப்பது அரசு உள்ளூர் உற்பத்தி பற்றி கருத்தில் கொள்ளாத நிலையையே காட்டுவதாகவும், வடக்கு கிழக்கில் இயங்கி வரும் ஒரேயொரு தொழிற்சாலையாக இது இருக்கும் வேளையில் இக்கடதாசி ஆலையையும் மூடிவிடும் நிலை உருவாகியிருப்பது அரசின் திறந்த பொருளாதாரத்தின் கீழ் இனரீதியான பாகுபாடான செயலாக எண்ணத் தோன்றுவதாகவும் தொழிற்சங்கவாதிகள்கருத்து தெரிவித்துள்ளார்கள். (ஐ-8)

## விஜயம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

மாசிமாத முற்பகுதியில் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொள்ளவிருந்த திருமலை இந்துசமய அபிவிருத்திச் சபைத் தலைவர் சுவாமிஜி தந்திரதேவா கப்பல் போக்குவரத்து தடைப்பட்டதால் தனது விஜயத்தை ஒத்திவைத்துள்ளதாக வடபிரதேச இந்துப் பேரவையினர் அறிவித்துள்ளனர். (ஐ-8)

## புண்ணிய நாச்சியர்மையார் தின விழா

திருநெல்வேலி, பெப். 16

யாழ் சைவபரிபாலன சபை நடத்தும் புண்ணிய நாச்சியம்மையார் தினம்எதிர் வரும் வியாழக்கிழமையன்று நீராவியடியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ். வலயம் 2 இன் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சங்கீத பூஷணம் ஐ. கணபதிப்பிள்ளை இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். தாவடியூர் ''தேவார இசைமணி'' எஸ் ஆர். திருஞான சம்பந்தனின் பண்ணிசை, நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரை, திருமுறை ஓதல், பரிசளிப்பு ஆகியன இடம்பெறவுள்ளன [ஐ-135]

# பூவரசங்குளம்-துணுக்காய் வீதியை புனரமைக்க படையினர் அனுமதி

### புலிகளின் அனுமதி பெற முயற்சி

பூவரசம் குளத்தில் இருந்து துணுக்காய் வரையுள்ள 32 மைல் தூரத்து வீதியை திருத்தியமைப்பதற்கு பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்த நெடுஞ்சாலை பாவிக்க முடியாதவாறு கடுமையாகப்பாதிக்கப்பட்டுள்ளது. இதனைத் திருத்தியமைப்பதற்கு பெருந் தெருக்கள் திணைக்களம் முயற்சிகள் எடுத்ததன் மூலம் இப்பாதையை திருத்தியமைக்க பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

இந்நெடுஞ்சாலையை திருத்தி அமைப்பதற்காக சிமெந்து, தார் என்பன தயாரான நிலையில் உள்ள போதும் இன்னும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்நெடுஞ்சாலையில் பாதித் தூரம் படையினரது கட்டுப்பாட்டிலும் மீதித் தூரம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலும் உள்ளதால் விடுதலைப்புலிகள் இன்னும் அனுமதி வழங்காமையினாலேயே இப்பணி தாமதமாவதாகப் பெருந்தெருக்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. விடுதலைப்புலிகளிடம் அனுமதி பெறும் முயற்சியில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் அனுமதி கிடைத்ததும் இப்பாதை திருத்தும் பணி ஆரம்பிக்கப்படும். எனினும் இப்பாதையில் உள்ள பறங்கி ஆற்றுப்பாலத்தை திருத்துவது [illegible] உள்ளது. (ஐ-9-164)

கொம்பனி வீதி குண்டு வெடிப்பு

## குண்டுதாரிப் பெண்ணை அடையாளம் காண்பதில் சிக்கல்

கொழும்பு: பெப். 16

கொழும்பு கொம்பனித் தெரு குண்டு வெடிப்புச் சம்பவத்தின் தற்கொலையாளி யார் என அடையாளம் காண முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

சடலத்தின் அருகில் ''இந்திராணி கணேசன், கதிரவெளி, வாகரை'' என்ற முகவரியுடனான அடையாள அட்டை காணப்பட்டது. அதிலுள்ள புகைப்படம் ஆட்திவுத்திணைக்கள கோவை படன் ஒப்பிடப்பட்டபோது—புகைப்பட மாறாட்டம்— கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அடையாள அட்டையில் உள்ள புகைப்படமும், கோவையிலுள்ள புகைப்படமும் வித்தியாசமாகவுள்ளன. ஆனால் பெயர், விலாசம் என்பன வித்தியாசமானதாக இல்லை

வாகரை பிரதேசம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு மேலதிக தகவல்களைப்பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-21)

# செய்திக் கொத்து

## இலவச ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

அரியாலை மக்களிடையே ஆங்கிலஅறிவை வளர்க்கும் நோக்குடன் அரியாலை அபிவிருத்திச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இலவச ஆங்கில பாடவகுப்புகள் இம்மாதம் 10 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

இதேவேளை ஜி.சீ.ஈ சாதாரண தர மாணவர்களுக்கான விஞ்ஞான, கணக்கியல் வகுப்புகளையும் இலவசமாக நடத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதுவதாக மேற்படி சங்கத் தலைவர் தெரிவித்தார். (ஐ-4)

## கடற்றொழில் கூ. சங்கம் புனரமைப்பு

சண்டிலிப்பாய், பெப். 16

சில்லாலை சாந்தை விநாயகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. பொன்னாலை கடலில் அதிகாலை நேரத்தில் அதிகளவு இறால் பிடிக்க முடியுமாதலால் அதிகாலை இரண்டு மணி தொடக்கம் அங்கு இறால் பிடிப்பதற்கு இப்பகுதி மீனவர்களை அனுமதிக்க வேண்டும் என்று இச்சங்கம் இப்பகுதி பாதுகாப்புப்படைபொறுப்பதிகாரியிடம் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கும் இதன் பிரதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

## முத்திரைகள் திரும்பப் பெறப்பட்டன

தென்மராட்சி, பெப். 16

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இடம்பெயர்ந்தோர் நிவாரண முத்திரை வைத்திருந்த சிலரின் முத்திரைகள் பிரதேச செயலகத்தினால் மீளப் பெறப்பட்டுள்ளது.

கரைவலை வைத்திருப்போர், வாகனம் வைத்திருப்போர் ஆகியோரின் நிவாரண முத்திரைகளே மீளப் பெறப்பட்டன. (ஐ-117)

## உபகரணம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

வளலாய்ப்பகுதியில் மீளக் குடியேறிய 130 குடும்பங்களுக்கு வாளி, பானை, திருவுபலகை, அலுமினியச்சட்டிகள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் வழங்கப்பட்டன.

மேற்படி நிறுவன உத்தியோகத்தர்கள் வளலாய் கிராமத்திற்கு நேரில் சென்று இப்பொருள்களை விநியோகித்தனர். (ஐ-5)

## தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிப்பு

சண்டிலிப்பாய் பெப். 16

மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபராகப் பல வருடகாலம் பணியாற்றி தமது 60-ஆவது வயதில் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள செ. கேசவராஜனுக்கு கல்லூரி பெற்றோர் சங்கம் அண்மையில் நடத்திய சேவைநலம் பாராட்டு விழாவில் அவருக்கு தங்கப்பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். பெற்றோர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் டாக்டர் சோ. சுந்தரராஜன் இத் தங்கப்பதக்கத்தை கேசவராஜனுக்கு அணிவித்தார். (ஐ-135)

## வெங்காயம் விலை சரிவு

உரும்பிராய், பெப். 16

வெங்காயத்தின் விலையில் வீழ்ச்சி காணப்படுகிறது. திருநெல்வேலி பொதுச் சந்தையில் கிலோ 10.00 ரூபாவாக விற்பனையாகிறது.

இதே நேரத்தில் வாழைப் பழத்தின் விலைகிலோ 8ரூபா முதல் 10 ரூபா வரை சரிந்துள்ளது. [ஐ-154]

## கிராம அபிவிருத்தி சங்கம்

கொழும்புத்துறை, பெப். 16

யாழ். கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கம் அண்மையில் யாழ். பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜி. மீ. ஞானசேகரவேல் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

யாழ். பிரதேசச் செயலாளர் பாலசிங்கம் செந்தில் நந்தனன் பிரதமவிருந்தினராகப் பங்குபற்றி மங்கள விளக்கேற்றி நிகழ்வைச் சிறப்பித்தார்.

சங்க ஆட்சிகுழுவும் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-30)

## கூ. சங்கக்கிளை திறப்பு

சண்டிலிப்பாய் பெப். 16.

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சித்திர மேழி கிளை ஆறு வருட காலத்தின் பின்பு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இக்கிளை இயங்கிய கட்டடம் சேதமடைந்து விட்டதால் தற்போது தனியார் வீடு ஒன்றில் இயங்கி வருகின்றது. இதே வேளை சங்கத்தின் மக்குவில் கிளைகட்டடமும் சேதமடைந்துள்ளதால் தனியார் கட்டடம் ஒன்றிலேயே இயங்கி வருகின்றது. (ஐ-135)

## புனரமைப்பு

சண்டிலிப்பாய் பெப். 16

கடந்த யுத்தகால அனர்த்தங்களின் போது பலத்த சேதமடைந்த பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பெரியவிளான் கிளைக் கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் நிதி உதவித் திட்டத்தின் நிதி மூலம் புனரமைப்புச் செய்யப்பட்ட இக்கிளைக் கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-135)

## ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்

அரியாலை, பெப். 16

யாழ். போதனா வைத்தியசாலைக்கென ஜனாதிபதி சிறிய அம்புலன்ஸ் வண்டி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்த அம்புலன்ஸ் வண்டியை கப்பல் மூலம் இங்கு எடுத்து வருவதற்கு வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ-17)

## தரமற்ற விதை நெல்

தென்மராட்சிப்பிரதேசகமநல சேவைகள் திணைக்களத்தினால் காலபோக நெற்செய்கைக்கென வழங்கப்பட்ட விதைநெல் முளைக்காததால் பல நெற்செய்கையாளர்கள் நட்டமடைந்துள்ளனர்.

இவர்கள் நட்டத்திற்கான நிவாரணம் கோரி விண்ணப்பித்தும் இதுவரை எதுவித பயனும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்தனர். (ஐ-117)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபைகள் இயங்குவதில் உள்ள தடைகளை நீக்கவேண்டும்

## ஈ.பி.ஆர்.எல்.எப். கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப் 16.

குடாநாட்டில் தேர்தல் நடத்துவதில் அரசு எந்தளவு ஆர்வம் காட்டியதோ அந்தளவுக்கு உள்ளூராட்சி சபைகள் செயற்படுவதில் உள்ள தடங்கல்களை நீக்குவதிலும் அரசு அக்கறை செலுத்த வேண்டும்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு இவ்வாறு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்த பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடக்கு வலிகாம மக்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெயர்ந்து வசித்த போதும் சிரமங்களின் மத்தியில் தேர்தலில் வாக்களித்துள்ளனர்.

பலருக்கு வாக்காளர் அட்டைகளே வரவில்லை. உரிய போக்குவரத்து வசதிகள் இல்லாததால் வாக்களிக்கவும் முடியவில்லை. பலர் அடையாள அட்டையுடன் சென்றும் கூட வாக்காளர் இடாப்பில் தனது பெயரினைக்கூட கண்டுபிடிக்க முடியாத நிலைகூட நிலவியது.

ஏதோ ஒரு விதமாக தேர்தல் முடிவடைந்து விட்டது. சிவில் நிர்வாகத்தைப் பலப்படுத்துவதும், சிவிலியன்களிடம் அதிகாரத்தைக் கையளிப்பதுமே தனது நோக்கம் என அரசு அறிவித்திருந்தது. அப்படியானால் வடக்கு வலிகாமத்திற்கான பிரதேச சபையின் நிர்வாக அலுவல்கள் எங்கு நடைபெறப் போகின்றன? மக்கள் எங்கு வாழப்போகிறார்கள்? என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

மயிலிட்டி மீனவ மக்கள் தமது சொந்த இடங்களில் தொழில் ஆரம்பிக்க விரும்புகிறார்கள். சொந்த இடங்களில் குடியேற விரும்புகிறார்கள்.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைத் தொழிலாளர்கள் சிமெந்து தொழிற்சாலை இயங்க வேண்டுமென்றும், தமது குடியிருப்புகளுக்கு திரும்ப வேண்டும் என்றும் விரும்புகிறார்கள்.

விவசாயிகள் தமது சொந்த இடங்களில் விவசாயத்தை மேற்கொள்ள, குடியிருக்க விரும்புகிறார்கள்.

மகாஜனக் கல்லூரி உள்ளிட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் தமது சொந்தப் பாடசாலைகளில் கற்க, கற்பிக்க விரும்புகிறார்கள்.

மாவிட்டபுரம் கோயில் தமது வழிபாட்டிற்காக திறந்துவிடப்பட வேண்டும் என்பது ஆன்மீக ஈடுபாடு உள்ளவர்களின் கோரிக்கை.

பிரதேசசபை செயற்படுவதற்கு அதன் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதிக்குரிய மக்கள் அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வாழ வேண்டியது முதல் நிபந்தனை. அதனைச் செய்ய முடியாவிட்டால் இந்த தேர்தலால் என்ன பிரயோசனம் என்ற கேள்வி எழுவது இயல்பானதே. ஏனெனில் மக்கள் தம் சொந்த இடங்களில் மீளக்குடியேற முடியும் என்ற நம்பிக்கையிலேயே வாக்களித்துள்ளனர்.

சாவகச்சேரி - பச்சிலைப்பள்ளி பிரதேசசபை வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அரசின் கட்டுப்பாடில்லாத பகுதிகளில் வாழும் மக்கள் மட்டுப்படுத்தப்பட்டளவு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்லவே அனுமதி உண்டு. கூட்டுறவுத்துறை மற்றும் உணவு அத்தியாவசியப் பொருள்கள் விநியோகத் துறையுடன் பிரதேச சபைகள் தொடர்புபட்டிருக்கின்றன. எனவே வரணி, கிளாலி, நாகர்கோயில் போன்ற பகுதிகளுக்கு தங்கு தடையற்ற உணவு, அத்தியாவசியப்பொருள்கள் வழங்குவதற்கும் சுபைமான போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றில் இழுபறிகள், கெடுபிடிகள் இருக்குமானால் பிரதேசசபைகள் சரியான முறையில் மக்களுக்கு தமது பணிகளை ஆற்ற முடியாது.

எனவே தேர்தல் நடத்துவதில் அரசு எத்தனை ஆர்வம் செலுத்தியதோ அதே அக்கறையுடன் இந்த சிக்கல்களை விடுவிப்பதற்கும் பிரதேச சபைகள் செயற்படுவதில் உள்ள தடையினை நீக்குவதிலும் ஈடுபாட்டுடன் செயற்பட வேண்டும். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ். மாவட்டத்துக்கு தனியான பரீட்சை நடத்துக

### வாசகர் திருமுகம்

யாழ் மாவட்டத்திலும் ஏனைய பகுதிகளிலும் பல இன்னல்களின் மத்தியிலும் பல வருடங்களாகத் தொண்டர் ஆசிரியர்களாகச் சேவையாற்றி வருவோருக்கு இன்று வரை எதுவித நேர்முகப் பரீட்சையோ நியமனமோ வழங்கப்படவில்லை. இது விடயமாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள் மற்றும் ஜனாதிபதியின் கவனத்துக்கும் பல தடவை எடுத்துக் கூறி வந்தோம்.

இதன் பயனாக கடந்த மாதம் முதல் வாரத்தில் முதற்கட்டமாக 500 தொண்டராசிரியர்களுக்கு நியமனம் வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்திருந்ததாக ஈ.பி.ஆர் எல் எவ். இனர் ஜனாதிபதியை சந்தித்த போது கூறியதாகச் செய்திகள் வெளியாகின.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் 1996 இல் நடைபெற்ற பயிலுநர் ஆசிரியர் போட்டிப்பரீட்சையின் அடிப்படையில் 549 பேர் அழைக்கப்பட்டு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. ஆனால் இன்னமும் தொண்டர் ஆசிரியர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கவில்லை. இது கடவுள் வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடுக்க மாட்டார் என்ற நிலையா? அல்லது தேர்தல் காலத்தில் மக்களை ஏமாற்றி வாக்குப் பெறும் முயற்சியா?

மேற்குறிப்பிட்ட வினாக்களுக்கு சம்பந்தப்பட்டவர்கள் தகுந்த பதிலைத் தருவார்களா?

மேலும் இடப்பெயர்வு காலத்தில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் விண்ணப்பித்தும் அனுமதி அட்டை கிடைக்காமையால் பரீட்சைக்கு தோற்ற முடியாது போனவர்கள் பலர். (தொண்டராசிரியர் உட்பட)

எனவே மேலும் ஆசிரியர்களை நியமனம் செய்வதாயின் யாழ். மாவட்டத்திற்கு என ஒரு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையை நடத்தி தொண்டராசிரியர்களுக்கு அவர்களின் சேவைக்கால அடிப்படையில் சலுகைப்புள்ளியை வழங்கி, நியமனத்தை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

க. சிவாகரன்.

நல்லூர்.

## சங்கீத பாடப் பரீட்சை முடிவு தனிப்பட்ட மாணவருக்கு எப்போது?

பரீட்சை திணைக்களம் 1995 டிசெம்பர் மாதத்தில் நடத்திய சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அழகியல், சங்கீத பாடத்திற்கான பரீட்சைப் பெறுபேறுகள் இன்னும் கிடைக்கவில்லை. சங்கீத செய்முறைத் தேர்வுகளும் நடைபெற்று பல மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் இதுவரை முடிவுகள் கிடைக்கவில்லை.

பாடசாலைப் பரீட்சார்த்திகளின் சங்கீதப் பரீட்சை அறிமுறை எழுத்துத் தேர்வைத் தொடர்ந்து, செய்முறைத் தேர்வு முடிவடைந்து அவர்களது பெறுபேறுகள் கிடைத்து விட்டன.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் சங்கீத பெறுபேறுகளை பூரணமாக பெறுவதிலுள்ள சங்கடத்தை சம்பந்தப்பட்ட கல்விசார் அதிகாரிகள், பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு நீக்குவார்களா?

என்னைப் போலவே ஏனைய தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பலரினதும் நன்மைக்காகவும் சங்கீத பாடப் பெறுபேறுகளை பரீட்சைத் திணைக்களம் உரிய பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்டவர்கள் அக்கறை காட்டுவார்களா?

பாதிக்கப்பட்ட மாணவன்.

மல்வம், உடுவில்.


இம் மாதத்திற்குரிய (ஆண்டு 2 — 11வரை) பயிற்சி வினாத்தாள்களும், புலமைப்பரிசில் (15) வினாத்தாள்களும் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.

BOND
யாழ் நகர்.
[53410]



புலமைப் பரிசில்
மொழி விருத்தி
தமிழ்
ஆண்டு 5

(இலங்கை அரசினால் நடத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரீட்சையில் வினாவப்படும் மொழி விருத்தி சம்பந்தமான அனைத்துவகை வினாக்களும் அடங்கியது)

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
சி/2885)


## நூலகங்கள் அமைக்கப்படும்

நல்லூர், பெப். 16

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளிலும் நூலகங்களை அமைக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நூலக அறிமுகப்பகுதிக்கான தேசியத்திட்டத்தின் கீழ் நூலகங்கள் உள்ள பாடசாலைகளில் அவற்றை மேலும் விரிவுபடுத்தவும் நூலகங்களற்ற பாடசாலைகளில் நூலகங்களை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். (ஐ-103)

## மகளிர் தினத்தை ஒட்டி பெண்களுக்கான போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 16

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபையின் மாவட்ட மகளிர் குழு, கூட்டுறவுச் சங்கங்களின் மகளிர் அங்கத்தவர்களுக்கிடையேயும், பாடசாலை மாணவிகளுக்கிடையேயும் போட்டிகளை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர்குழு ஒவ்வொரு கூட்டுறவுச் சங்க மகளிர் குழுக்களுக்கும் போட்டி விவரக்கொத்தை அனுப்பிவைத்துள்ளது. கட்டுரை, பேச்சு, கோலம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன. போட்டிகள் யாவும் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை மண்டபத்தில் நடைபெறும். (ஐ-15)

## சிவராத்திரி தினத்தன்று ஊரடங்கைத் தளர்த்துக

### இந்துசமயப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப் 16

மகாசிவராத்திரி தின வைபவத்தை முன்னிட்டு அன்றைய தினம் இரவிலும், பகலிலும் பூஜை வழிபாடுகளை நடத்துவதற்காக ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்துமாறு கோரி யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையினர் வடபகுதி படைத்தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் சமய கலாசார அலுவல்கள் அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், யாழ் அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஐ-8)

## யாழ். விவசாயத் தேவைகளுக்கு $1\frac{1}{4}$ லட்சம் லீற்றர் ம.எண்ணெய்

யாழ். மாவட்ட விவசாயத் தேவைக்கென ஒரு லட்சத்து 25 ஆயிரம் லீற்றர் மண்எண்ணெய் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கமநலசேவைத்திணைக்கள அதிகாரிகள் ப.நோ.கூ. சங்கங்கள் உட்பட பலரின் வேண்டுகோளை அடுத்தே விவசாயிகளுக்கென மண்எண்ணெய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

ஒவ்வொரு மாதமும் விவசாயிகளுக்கென தொடர்ந்து மண்எண்ணெய் ஒதுக்கீடு செய்யப்படும்.

விவசாயிகளின் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு கமநல சேவை அதிகாரிகளின் சிபாரிசுடன் விவசாயிகளுக்கான மண்எண்ணெய் விநியோகம் செய்யப்படும்.

கடந்த மாதமும் யாழ் மாவட்டத் தேவைக்கென 13 லட்சம் லீற்றர் மண்எண்ணெய் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டது. 37 நிலையங்கள் ஊடாக மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. எனவே மண்எண்ணெயை கள்ளச் சந்தையில் அதிகரித்த விலையில் கொள்வனவு செய்யும் நிலையோ அல்லது மண் எண்ணெய்க்குத் தட்டுப்பாடுவருவதற்கோ இடமில்லை என்று பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் கூறினார்.

பெப்ரவரி மாதத்திற்கு 13 லட்சம் லீற்றர் மண்எண்ணெய் கொழும்பிலிருந்து எடுத்து வரப்படும் என்று அவர் கூறினார். (இ 5)

## அரச அதிபருக்கு மகஜர்

மகா சிவராத்திரிதினத்தை முன்னிட்டு அன்றையதினம் அமுலிலுள்ள ஊரடங்குச் சட்டத்தை தளர்த்தி இந்துக்கள் இவ்விரதத்தினை அனுஷ்டிக்க வழி செய்யுமாறு கேட்டு சரசாலை இந்து மன்றம் யாழ். அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது. (ஐ-8)


## நன்றி நவிலல்

காலஞ்சென்ற
பொன்னையா குணரத்தினம்

அவர்கள் சுகயீனம் அடைந்திருந்தபோது இறுதி வரை அவரின் உயிருக்காகப் போராடிய யாழ். போதனா வைத்தியசாலை அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் பணியாற்றும் நரம்பியல் வைத்திய நிபுணர், மற்றைய வைத்திய அதிகாரிகள், தாதிகள், ஊழியர்கள், சகலருக்கும் மரணச் சடங்கின் போது சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும், மரணச் சடங்கில் பங்கேற்ற யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருமதி குணரத்தினம் உலகேஸ்வரி
(மனைவி)

திரு பொன்னையா சேனாதிராஜா
(சகோதரன்)

504, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
(53408)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## தனியான அணுகுமுறை

கடந்த மாதம் தேர்தல் நடத்தப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் மேயர், தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இவ் வாரத்தில் வைபவ ரீதியாகப் பதவி ஏற்கவுள்ளனர்.

ஆனால் வல்வெட்டித்துறை நகர சபை உட்பட ஏனைய சபைகளில் வெற்றி ஈட்டிய தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ அமைப்பின்) பதினெட்டு உறுப்பினர்களும் பதவி ஏற்கமாட்டார்கள் என்று அக்கட்சியின் முதல்வர் எம். கே. சிவாஜிலிங்கம் அறிவித்திருக்கிறார்.

போர் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்; நிபந்தனைகள் இல்லாது பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்; என்பன ரெலோவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்பட்ட பிரதான கோரிக்கைகளாகும்.

அந்தக் கோரிக்கைகளை, வாக்காளர்களில் ஒரு பகுதியினர் ஆதரித்து வாக்களித்ததாலேயே ரெலோ உறுப்பினர்கள் தெரிவானார்கள். அந்த வகையில் அரசு இக் கோரிக்கை குறித்து சாதகமான பதில் எதனையும் அளிக்காத தன்மையினால், அந்த அமைப்பு பதவியேற்காமல் பகிஷ்கரிக்க எடுத்துள்ள தீர்மானம் சரியானதே.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் 1983 மே மாதம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் தமது பதவிகளை ஏற்கவில்லை. கடந்த 15 வருடங்களாக உள்ளூராட்சி சபைகள் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் இன்றியே இயங்கி வருகின்றன!

ஆனால் இன்றைய சூழ்நிலையிலும் அரசியல் பின்னணியிலும் ரெலோவின் பகிஷ்கரிப்பு வித்தியாசமாக நோக்கப்படவேண்டியதாகும். உள்ளூராட்சித் தேர்தல் உகந்த நேரத்தில் நடத்தப்படவில்லை என்று கூறிக்கொண்டே அரசாங்கத்தின் நோக்கத்துக்குத் துணைபோகும் விதத்தில் ஏனைய கட்சிகள் செயற்பட ரெலோ மட்டும் தனியான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கின்றது.

எனினும் ரெலோவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ள இரண்டு கோரிக்கைகளில் ஒன்று தானும் இப்போதைக்கு அரசினால் ஏறெடுத்தும் பார்க்கப்படமாட்டாது என்பது மட்டும் நிச்சயம்.

விடுதலைப் புலிகளைத் தடை செய்து பேச்சுவார்த்தைக்கான கதவுகளை அரசு இறுக்க மூடி விட்டதும்—

புலிகளை எதிர்த்துப் போராடி அவர்களைத் தோல்வி அடையச் செய்ய வேண்டும்., அதற்காகப் படையை விட்டு விலகியவர்கள் மீண்டும் அதில் இணைய வேண்டும் என்று ஜனாதிபதி அழைப்பு விடுத்திருப்பதும்—

எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசு மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்தைக் கேட்கப் போவதில்லை என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறியிருப்பதும்—

வடக்குக்கான பாதையைத் திறந்த பின்னரே புலிகளைத் தோற்கடிக்கும் போர் ஆரம்பமாகும் என்று இராணுவத் தளபதி தெரிவித்திருப்பதும்—

ரெலோவின் தேர்தல் கோரிக்கைகள் இப்போதைக்கு நிறைவேற்றப்படமாட்டா; அவற்றுக்குப் பாதகமான நேர்மாறான செயற்பாடுகளே தொடரும் என்பதனை கேள்விக்கோ சந்தேகத்துக்கோ இடமின்றி உறுதி செய்கின்றன.

# புலிகளிடம் 10 ஆண்டு ஆட்சி வழங்க சந்திரிகா முன் வந்திருந்தாராம்!

## "ரைம்" சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 16

தேர்தல் எதுவும் நடத்தாமலே, வடமாகாணத்தைப் பத்து வருடங்களுக்கு ஆள்வதற்கு, விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனுக்கு வழங்குவதற்குத் தாம் தயாராக இருந்ததாகவும்—

இது குறித்துத் தாம் அவருக்குத் தகவல் அனுப்பியிருந்ததாகவும்—

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா, பிரபல "ரைம்" சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

அவ்வாறு செய்யும்போது புலிகள் இயக்கத்தின் போராளிகளை பொலீஸ் படையாக உருவாக்கிக் கொள்ள அனுமதி அளிப்பதாகவும் தாம் தெரிவித்திருந்ததாக ஜனாதிபதி அந்தப் பேட்டியில் மேலும் கூறியுள்ளார்.

"ரைம்" சஞ்சிகையின் இம் மாதம் 9 ஆம் திகதிய பதிப்பில் இலங்கைப் பிரச்சினையையே முகப்புப் படமாக அச்சிடப்பட்டுள்ளது.

இலங்கை பற்றிய கட்டுரையுடன், ஜனாதிபதியின் பேட்டி ஒன்றும் பிரசுரமாகியுள்ளது.

சண்டையை நிறுத்தினால் சுயாட்சி திட்டம் ஒன்றைக் கொண்டுவருவதாகவும் தாம் பிரபாகரனுக்கு வாக்குறுதி அளித்ததாகவும் ஜனாதிபதி தமது பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் விடுதலைப்புலிகளின் தலைவர் இவற்றுக்குப் பதில் எதுவும் அனுப்பவில்லை என்று ஜனாதிபதி கூறியுள்ளார். (அ)

## பரிசளிப்புவிழா

வலிகாமம் தெற்கு, பெப். 16

உரைப்புலம் குணபாலன் வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் கடந்த புதன் கிழமை வித்தியாசாலை அதிபர் அ. ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவில் கல்வி வலயம் இரண்டின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு. கணபதிப்பிள்ளை முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்.

சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா, மானிப்பாய் இந்துக்கல்லூரி இளைப்பாறிய அதிபர் எஸ். கேசவராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-152)

## முறைசாராக் கல்விப் பயிற்சிகள் 13 பாடசாலைகளில் நடைபெறும்

வடமராட்சி, பெப். 16

யாழ். கல்வி வலயம் இரண்டின் கீழ் உள்ள 13 பாடசாலைகளில் இவ் வாண்டுக்கான முறைசாராக் கல்வி தொழிற்றிறன் அபிவிருத்திப் பயிற்சிகள் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம்திகதி ஆரம்பமாகி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி வரை நடைபெறும் என யாழ். கல்வி வலயம் இரண்டின் பணிப்பாளர் எஸ். சிவராஜா அறிவித்துள்ளார்.

இப் பயிற்சிகள் சங்கானை கோட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, சண்டிலிப்பாய்க் கோட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, தெல்லிப்பளைக் கோட்டத்தில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி, உடுவில் கோட்டத்தில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, கோப்பாய்க் கோட்டத்தில் அச்சுவேலி சென் திரேசா வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, பருத்தித்துறைக் கோட்டத்தில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி, வல்வெட்டித்துறை மகளிர் கல்லூரி, கரவெட்டிக் கோட்டத்தில் கரவெட்டி திரு இருதயக் கல்லூரி, உடுப்பிட்டி அ. மி. கல்லூரி, வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி, மருதங்கேணிக் கோட்டத்தில் செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை ஆகிய பாடசாலைகளில் இப் பயிற்சிகள் நடைபெறும். மனை அலங்காரம், உடை அமைத்தல், மனை முகாமைத்துவம், தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து, ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து, மூலிகைப் பண்ணை, வானொலி, தொலைக்காட்சி திருத்துதல், கணனி ஆகிய எட்டுத் துறைகளில் இப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

(ஐ-173)

# கிளிநொச்சியின் உண்மை...

(முதலாம் பக்கத் தொடர்)

பலாலியில் அவர்களுடன் இணைந்து கொண்டார்.

### உ அணிகளாக ஹெலிகளில்

பலாலியில் இருந்து இரு அணிகளாக, இவ் விரண்டு பெல் 212 ரக ஹெலிக்கொப்டர்கள் மூலம் பத்திரிகையாளர்கள் ஆனையிறவுக்குக் கூட்டிச்செல்லப்பட்டனர்.

முதலில் பத்திரிகையாளர் குழுவைச்சேர்ந்த புகைப்படக் காரர்கள் யுத்த முனைக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

அவ்வேளையில் ஏனைய பத்திரிகையாளர்களுக்கு பலாலியில் வைத்து வடபகுதி படைத்தளபதி மேஜர் ஜெனரல் எல். பி. பலகல்ல யுத்த நிலைமை குறித்து விளக்கமளித்தார்.

காலையில் புகைப்படக்காரர்கள் ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி யுத்தமுனைக்குச் சென்ற சமயம் யுத்தமுனை அமைதியாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் ஆனையிறவுக்கு திரும்பியதும் ஏனைய பத்திரிகையாளர்கள் ஆனையிறவுக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

அங்கு வைத்து — ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சிப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள — 54 டிவிஷன் படையின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ஜொஹான் குணவர்த்தன பத்திரிகையாளர்களுக்கு யுத்த நிலைமை குறித்தும் அண்மைக் காலச் சமர் ஆகியவை குறித்தும் விளக்கினார்.

பின்னர் பத்திரிகையாளர்கள் வாகனங்கள் மூலம் பரந்தனுக்குக் கூட்டிச்செல்லப்பட்டனர்.

### ஆயுதங்கள் காண்பிக்கப்பட்டன

கடந்த முதலாம், இரண்டாம்திகதிச்சமர்களின்போது கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகக்கூறப்படும் சுமார் நூற்றி ஐம்பது ஆயுதங்கள் பத்திரிகையாளர்களுக்குக் காட்டப்பட்டன. அங்கு நிலைகொண்டுள்ள 545 ஆவது பிரிகேட்டின் தளபதி பிரிகேடியர் ஜே. விஜயரத்தின பத்திரிகையாளர்களுடன் உரையாடினார்.

### குண்டு துளைக்காத மார்புக் கவசம்

அதன் பின்பு பாதுகாப்புக் கருதி பத்திரிகையாளர் அனைவருக்கும் குண்டுதுளைக்காத மார்புக் கவசம் (ஜக்கெட்), இராணுவத் தலைக்கவசம் ஆகியன அணிவிக்கப்பட்டு வாகனத்தில் அவர்கள் கரடிப்போக்குச் சந்தி வரை கூட்டிச் செல்லப்பட்டனர்.

கரடிப்போக்குச் சந்தியில் உள்ள 543 ஆவது பிரிகேட் தலைமையகத்தில் பாதுகாப்பான — பங்கர் போன்ற — தலைமையக அறையில் அந்த பிரிகேட்டின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் எச். ஏ. என். டி. பெரேரா பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

காலையில் பத்திரிகையாளர் குழுவைச் சேர்ந்த புகைப்படப் பிடிப்பாளர்கள் யுத்த முனைக்கு வந்து சென்ற போது அவர்களது வாகனங்கள் எழுப்பிய சத்தம் காரணமாகவோ, அல்லது வேறு தகவல்கள் காரணமாகவோ அவர்கள் யுத்த முனையை விட்டுப் புறப்பட்டதும் படையினரின் முன்னணிக் காவலரண்களில் புலிகளின் பீரங்கிக் குண்டுகள் வந்து விழத்தொடங்கியுள்ளதாகவும் அதனால் மேலும் முன்னே செல்வதைத்தவிர்த்து கரடிப்போக்கு சந்தியுடன் திரும்பும்படியும் பிரிகேடியர் பெரேரா பத்திரிகையாளர்களைக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் பத்திரிகையாளர்கள் யுத்த முனைக்கு போக விரும்புவதாக அடம்பிடித்ததை அடுத்து அனைவரையும் கால்நடையாகக் கூட்டிச் [illegible] னர்.

அவரின் தலைமையில் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து கிளிநொச்சி ரயில் நிலையப் பகுதி வரை பத்திரிகையாளர் அணி சென்றது.

### வீதியைத் தவிர்த்து நடந்தனர்

இராணுவத்தின் ஜக்கெட்டுகள், தலைக் கவசங்கள் அணிந்தபடி, பாதுகாப்புக் கருதி கண்டி வீதியைத் தவிர்த்து, பக்கத்தில் உள்ள காடுகள், பற்றைகள், உடைந்த கட்டடங்கள் வழியாக பத்திரிகையாளர்கள் சென்றனர்.

கடந்த முதலாம், இரண்டாம் திகதிகளில் நடந்தகடுஞ் சமரின்போது புலிகள் நடத்திய கடும் தாக்குதலினால் கிளிநொச்சிக் காட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்தத்தைப் பார்க்க முடிந்தது.

கிளிநொச்சித் தபாலகம், கிளிநொச்சி ஆஸ்பத்திரி, பிற கட்டடங்கள், வீடுகள் அனைத்தும் தகர்ந்து போய்க் கிடந்தன. அப்பகுதியில் இருந்த பெற்றோலியக் கூட்டுத்தாபன தாங்கிகள் பிளந்து கிடந்தன. பாரிய நீர்த்தாங்கி தகர்ந்து சிதறிக் கிடக்கக் காணப்பட்டது.

### புதிய பங்கர்களை அமைக்கும் படையினர்

படையினரின் தற்போதைய முன்னணிக் காவலரண்களை ஒட்டி புதிய பங்கர்களை அமைப்பதில் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலை வெளியே இருந்து பார்வையிட முடிந்தது. அது அதிக சேதம் அடைந்ததாக வெளியில் இருந்து பார்க்கும் போது தெரியவில்லை.

கிளிநொச்சி ரயில் நிலையத்திலிருந்து மேற்காகசுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் வரை நடந்து சென்று அங்கு படையினரின் நடவடிக்கைகளைப்பார்க்க முடிந்தது.

### புலிகளின் ஷெல்லால் அழிந்த காடுகள்

புலிகள் அடித்த பீரங்கிகளினால் காட்டின் பெரும் பகுதி அழிந்து, மரங்கள் விழுந்து கிடந்தன.

வளைந்து, வளைந்து சுமார் ஐந்து கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்ற பத்திரிகையாளர்களைக் கூட்டிச் செல்வதற்காக, வாகனங்களை யுத்தமுனைக்கு அனுப்பும்படி பிரிகேடியர் பெரேரா 'வாக்கி டோக்கி' மூலம் கோரினார்.

அதேநேரம் அப்பகுதியில் நின்ற படையினரின் புல்டோஸர் ஒன்று பதுங்கு குழி அமைத்தல், மற்றும் புதிய முன்னணிக் காவலரண்களை அண்டிய காட்டைத் துப்புரவு செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக திடீரென இயங்கத் தொடங்கியது.

வாகனச் சத்தம் கேட்கத் தொடங்கியதும் அப்பிரதேசத்தை நோக்கி ஷெல்கள் வந்து விழத்தொடங்கின. சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்குள் இரண்டொரு ஷெல்கள் வந்து விழுந்த சத்தங்கள் கேட்டன. அதே சமயம் பரந்தனிலிருந்து 130 மி. மீற்றர் ஆட்லறிகள் மூலம் படையினர் ஏவிய ஷெல்கள் படையினரின் தற்போதைய முன்னணிக் காவலரண்களைத் தாண்டிச் சென்று வீழ்ந்து வெடித்ததையும் கேட்க முடிந்தது.

### அவசர அவசரமாக வாகனத்தில் ஏற்றப்பட்டனர்

அப்போது ஏற்பட்ட பதற்றத்தை அடுத்து பத்திரிகையாளர்கள் வாகனங்களில் அவசர அவசரமாக ஏற்றப்பட்டு கரடிப் போக்குச் சந்திக்கு விரைந்து கொண்டு வந்து சேர்க்கப்பட்டனர்.

மாலை ஐந்து மணியளவில் ஆனையிறவில் உள்ள 54 டிவிஷன் படையணித் தலைமையகத்தில் மதிய போசனத்தை அருந்திய பத்திரிகையாளர்கள் 5.45 மணியளவில் ஹெலிக்கொப்டர் மூலம் பலாலிக்கு கூட்டிவந்து சேர்க்கப்பட்டனர்.

(உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படாதிருந்தால் பல இராணுவ முகாம்கள் இன்று இருந்திருக்காது

## இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, பெப். 16

"இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படாதிருந்தால் பல இராணுவ முகாம்கள் இன்று வடக்கில் இருந்திருக்காது."

இராணுவத் தளபதி ஜெனரல் றொஹான் தலுவத்த நேற்று முன்தினம் ஒளிபரப்பான ரூபவாஹினி 'ஜனமண்டலி' நிகழ்ச்சியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் இராணுவத் தளபதி மேலும் கூறியதாவது:-

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது பலாலி, ஆனையிறவு, பூநகரி ஆகிய இடங்களில்தான் இராணுவ முகாம்கள் அமைந்திருந்தன. ஆனால் முகாம்களிடையே தொடர்புகள் இருக்கவில்லை.

சக்தி வாய்ந்த விமானப் படை ஒன்று இருக்குமானால் தனித் தனியாக படைமுகாம்களை வைத்திருக்க முடியும்.

விடுதலைப் புலிகளின் பிரதான நோக்கம் விமானப் படையைப் பலவீனப்படுத்துவதே. அதனால்தான் ஏவுகணைகளை வரவழைத்தனர். கடற்புலிகள் கடற்படை மீது தாக்குதல்கள் மேற்கொள்கின்றனர்.

இப்படியான நிலையில் யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்படாமல் இருந்தால் ஏற்கனவே தொடர்புகள் இன்றித் தனித்தனியாக அமைந்திருந்த முகாம்கள் இன்று இருந்திருக்குமா?

பாதை திறப்பது அல்ல முக்கியமான விடயம். பாதை திறக்கப்பட்ட பின்பு இரு மருங்கிலும் குறிப்பிட்ட தூரம் இராணுவத் தளம் பலமானதாக இருக்க வேண்டும். திறக்கப்பட்ட பாதை பாதுகாக்கப்பட வேண்டும். இது ஒரு கட்ட வேலை அல்ல. பல கட்டங்கள் கொண்டது.

வன்னியில் மன்னாருக்கான பாதை திறக்கப்பட்டுள்ளது. நெடுங்கேணி கைப்பற்றப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கருத்தில் எடுக்கும்போது வன்னியில் தற்போது இராணுவத்துக்குத் தளமொன்று உருவாக்கப்பட்டுள்ளது."

இப்படி அவர் மேலும் கூறினார்.

இந்தப் பேட்டியின் ஒரு பகுதி நேற்று வெளியாகியிருந்தது. (இ-21)

---

## கோவையில் மீண்டும் குண்டு வெடிப்பு

புதுடில்லி, பெப். 16

கோவையில் நேற்று மாலை மற்றும் ஒரு குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

ஒப்பனைக்கார வீதி என்ற நெரிசல் மிக்க இடத்தில் குண்டு வெடித்ததால் ஒருகட்டடம் சேதமடைந்தது. உயிர்ச்சேதங்கள் பற்றிய விவரங்கள் தெரியவரவில்லை.

அதேசமயம் இன்னோர் இடத்தில் ஒரு காரில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டை பொலீஸார் செயல் இழக்கச் செய்தனர். (இ-9)

---


எமது புதிய வெளியீடு!

மோகன்லால் பிரகாஷ்ராஜ் நடித்த

★ மகான்

ஒறிஜினல் வெளியீடுகள்!

★ திருவருள்
★ திருமால் பெருமை
★ ஔவையார்
★ பக்த ஹனுமான்
★ தசாவதாரம்
★ கிளிப்பேச்சு கேட்கவா
★ பாசவலை
★ C. I D சங்கர்
★ ஆதித்யன்
★ அம்பிகாபதி
★ கப்பலோட்டியதமிழன்

ஓடியோ CD வெளியீடு!

★ அன்னமாச்சார்யா

சுப்பஸோ வீடியோ

யாழ்ப்பாணம். (சி/2894)


---

## இலவச ஆங்கில வகுப்பு

வடமராட்சி பெப். 16

தும்பளை மேற்கு சனசமூக நிலையத்தில் மாணவர்களின் வசதி கருதி இலவச ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் இப்பயிற்சி வகுப்புகள் தினமும் நடைபெற்று வருகின்றன. (ஐ-173)

---

## கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்)

அதிகாரி இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

அங்கு சிக்குண்டுள்ள விடுதலைப் புலிகள் அணியில் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அங்கு தங்கியுள்ள புலிகள் வெளியில் உள்ள தமதுசகாக்களுக்கு அங்குள்ள நிலைமை குறித்து தகவல் கொடுக்கலாம் என நம்பப்படுகிறது. (இ-3)

---

# வடமராட்சியில் தொலைபேசி இணைப்பு நிலையம் அமைப்பு!

## விரைவில் சேவை ஆரம்பமாகும்

வடமராட்சி, பெப். 16

வடமராட்சிப்பிரதேசத்துக்கான தொலைபேசிச் சேவை விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தச் சேவைக்கான பிரதான இணைப்பு நிலையம் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை வளவில் உள்ள வைத்திய அதிகாரியின் விடுதித் தொகுதிக் கட்டடத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது. வடமராட்சி தொலைபேசி இணைப்புக்கென இந்த நிலையத்துக்கு அருகில் மிக உயரமான ஏரியல் ஒன்று சில தினங்களுக்குமுன்னர் அமைக்கப்பட்டுள்ளது. இணைப்பு நிலையத்திலிருந்து மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை, புலோலி உபதபால் நிலையம், பருத்தித்துறை தபால் நிலையம் ஆகியவற்றுக்கு முதலில் தொலைபேசி இணைப்பு வழங்கப்படவுள்ளது தொடர்ந்து ஏனைய திணைக்களங்களுக்கும், தனியார்களுக்கும் தொலைபேசி இணைப்பு வழங்கப்படும் எனத் தெரியவருகிறது. (ஐ-173)

---

## ஆயுதங்களை கைப்பற்றியதாக புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 16

மட்டக்களப்பு மாவட்டம் மாவிலதென்ன இராணுவக் காவல் நிலையம் மீது நேற்று முன்தினம் மேற்கொண்ட தாக்குதலில் ஆயுத தளபாடங்களை புலிகள் கைப்பற்றியுள்ளதாக "புலிகளின் குரல்" நேற்றிரவு தெரிவித்தது.

எதுவித இழப்புக்களும் இன்றி மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் ஏ. கே. எல். எம். ஜி ஒன்று, ரி 56-1 — ஒன்று, ரி 56-2 — இரண்டு, ரி 81 — ஒன்று, ரி 56 ரவைக்கூடு — 10, குண்டுகள் 09, நடுத்தர ரவைகள் — 300 உட்பட பல ஆயுத தளபாடங்களைப் புலிகள் கைப்பற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

---

## மாங்குளம் நோக்கி...

(முதலாம் பக்கத் தொடர்)

யினர் காயமடைந்து அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து தகவல் எதுவும் இல்லை.

மோதல்கள் தொடர்வதால் சடலங்களைத் தேடி எடுப்பது கடினம் என்றும், இதனால் உயிரிழப்புக் குறித்து சரியான விவரங்களை அறியமுடியாத நிலை இருப்பதாகவும் யுத்த முனைச் செய்திகள் தெரிவித்தன.

கண்டி வீதி வழியாக வந்த 55 ஆவது படையணியினரே கனகராயன்குளத்தில் இருந்து மேற்குப் புறமாகவும் —

மாங்குளத்துக்குக் கிழக்கே ஒலுமடுவில் நிலைகொண்டுள்ள 53 ஆவது படையணியினர் மாங்குளத்தை நோக்கி மேற்குப்புறமாகவும் முன்னேற முயற்சிக்கின்றனர்.

கனகராயன் குளம் பகுதியில் இருந்து மேற்குப்புறமாக முன்னேற முயலும் 55ஆவது படையணி மூன்று முறிப்பு ஊடாக மாங்குளத்தை அடைய முயற்சித்து வருகின்றது.

மூன்று முறிப்புப் பகுதியை நோக்கி முன்னேற்ற நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் மீது தாக்குதல் நடத்தி அவர்களைப் பின்வாங்கச் செய்திருப்பதாகவும் —

மூன்று இராணுவத்தினரின் சடலங்கள் உட்பட பல ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றியுள்ளதாகவும் புலிகளின் குரல் நேற்றிரவு தெரிவித்தது.

பி-கே.எல் எம்.ஜி -ஒன்று, ஏ.கே.எல்.எம் ஜி. -இரண்டு, ரி 56 — 2 மூன்று. 45 மி மீ. துப்பாக்கி — இரண்டு. ஷெல்கள் — 20, ஆர். பி. ஜி. ஷெல்கள் - 4, ஏ. கே. ரவைக்கூடு - 4 மற்றும் ஆயுத தளபாடங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதலில் இசைவாணன் (ஆறுமுகம் தர்மராசா — கிளிநொச்சி), சுதான் (சிவலிங்கம் ராமு — அம்பாறை) ஆகியோர் களப்பலியானார்கள் என்றும் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது. (இ-9-21-9-3)

---

## இ.தொ.கா. அலுவல...

(முதலாம் பக்கத் தொடர்)

மலையகத்தில் உள்ள இ. தொ. கா. அலுவலகங்கள் கல் வீச்சுக்கு இலக்காகின; அதன் தலைவர் எஸ். தொண்டமானின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

கறுப்புக் கொடிகள் கட்டி தமது எதிர்ப்பை அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

90 சதவீதமான தொழிலாளர்கள் இன்னமும் வேலைக்கு திரும்பவில்லை என்று மலையக மக்கள் விடுதலை முன்னணித் தலைவரும், பிரதி அமைச்சருமான எஸ். சந்திரசேகரன் தெரிவித்தார்.

தொழிலாளரின் சம்பள உயர்வு குறித்து போராட்டம் நடத்த பல தரப்பினரையும் கொண்ட நடவடிக்கைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்று அவர் ஆலோசனை கூறியுள்ளார்.

(மற்றுமொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

(இ-8)

---


# யாழ். மாவட்ட கிரிக்கெற் சங்கம்

6 பேர் ஐந்து ஓவர் கொண்ட

சுற்றுப் போட்டி

எமது சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களில் ஒவ்வொரு கழகங்களின் சார்பிலும் ஓர் அணி மட்டுமே பங்குபற்றலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:

21-02-98 சனிக்கிழமை

அணி ஒழுங்குத் தேர்வு:

22-02-98 ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில்

விண்ணப்பக்கட்டணம்: 100/-

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

தி. ஜெகநாதன் (செயலாளர்)

310, நாவலர் றோட்,

யாழ்ப்பாணம். (சி/2893)


---


உ

பருத்தித்துறை, கொட்டடி

அருள்மிகு சித்தி விநாயகர்

(பெரிய பிள்ளையார்)

# வருடாந்த மஹோற்சவம்

17 - 02 - 1998 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

சிவப்பிரம்மஸ்ரீ. முத்தமிழ்க் குருமணி

நா. சர்வேஸ்வரக் குருக்கள்

அவர்களின் நல்லாசியுடன்,

சிவப்பிரம்மஸ்ரீ ராம் - கெங்காதரக் குருக்கள்

தலைமையில் மஹோற்சவம் நடைபெறும்.

தேவஸ்தான குரு:-

சிவப்பிரம்மஸ்ரீ சக்திதாச சர்மா

உற்சவங்கள் யாவும் காலை 7-00 மணி முதல் 10-00 மணி வரையும், பிற்பகல் 2-00 மணி முதல் 5-00 மணி வரையும் நடைபெறும்.

அனைவரும் வருக! ஐங்கரன் அருள் பெறுக!

ஆலய குருக்களும், பரிபாலன சபையும்.

(53414)


---

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

சரண் அடைந்திருந்தார்.

முகாம் புலிகளிடம் வீழ்ந்த பின்னர் இவர் புலிகளின் வாகனத்தில் சென்று ஒலிபெருக்கி மூலம் முகாமில் இருந்து ஓடிய படையினரை சரண் அடையுமாறு கோரினார் என்றும் —

அங்கு கைப்பற்றிய ஷெல் ஒன்றை விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனிடம் இவர் கையளித்தபோது, பிரபாகரன் இவரை கட்டித் தழுவி வரவேற்றார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

புலிகளுக்காக உளவு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கே இவர் இராணுவத்தில் சேர்ந்து இராணுவத்தின் ஆட்லறி பிரிவில் இணைந்திருக்கலாம் என்று படை வட்டாரங்களில் நம்பப்படுகிறது.

அண்மையில் படையினரால் கைது செய்யப்பட்ட பெண் போராளி ஒருவர் மூலமும் வேறு ஆள்கள் மூலமும் இந்த தகவல்கள் கிடைத்தன என்று பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தனர்.

ஆட்லறிகள் மற்றும் பீரங்கிகள் தொடர்பான பயிற்சிகளைப் பெறுவதற்காக இவர் அண்மையில் வெளிநாடு சென்றிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-8)

---

## பரீட்சை முடிவுகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ள முயற்சிக்கப்பட்டது.

எனினும் விடுமுறை நாளாக இருந்ததால் அங்கு வேலைக்கு அதிகாரிகள் வரவில்லை.

இன்று பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விவரங்கள் பெறப்பட்டு வெளியிடப்படும். (இ-8)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16 - 02 - 98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org